
பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 05, திங்கட்கிழமை 19.06.2017 கதிர் 225



# பிரச்சினைக்கு இன்று தீர்வு!

## முதல்வர் தருவார் என நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடக்கு மாகாண சபை தொடர்பில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைக்கு இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சுமுகமான தீர்வு ஒன்றை பெரும்பாலும் இன்று முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று பல தரப்பினருடனும் நிலைமைகள் குறித்து விரிவாகப் பரிசீலித்த முதலமைச்சர் இவ்விடயம் தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எழுதியபிந்திய கடிதத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களில் சாதகமான அம்சங்களைக் கவனத்தில் கொள்வார் எனக் கூறப்படுகின்றது.

பக்கம் 18 >>>

# இந்தச் சண்டை இனத் துரோகம்!

## வியாழேந்திரன் எம்.பி. சாட்டை



இரு பிரிவுகளாகப் பிரிந்து கொண்டு நாம் போடுகின்ற இந்தச் சண்டை தமிழ் மக்களுக்குச் செய்கின்ற பெரும் துரோகமாகும் என மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

பக்கம் 18 >>>

# மஹிந்த தரப்பு உறுப்பினர் விக்னேஸ்வரனுக்கு ஆதரவு!

கொழும்பு, ஜூன் 19

முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ் வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வடமாகாண சபை உறுப்பினர் தர்மபால செனவிரத்ன கைச்சாத்திடவில்லை.

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமையவே அவர் கைச்சாத்திடவில்லை என சிறிலங்கா பொது ஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

பக்கம் 18 >>>

# சமரச முயற்சியில் மதத் தலைவர்கள்

யாழ்ப்பாணம்.ஜூன், 19

வடக்குமாகாணசபையில் எழுந்துள்ள நெருக்கடி நிலையை சாதகமாகத் தீர்த்துவைக்கும்முயற்சியில் மதத் தலைவர்களும் ஈடுபட்டிருக்கின்றனர் என்று தெரிய வருகின்றது.

இந்த முயற்சியின் ஒரு கட்டமாக நல்லைகுருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர

பக்கம் 18 >>>

# திருத்த நடவடிக்கையை தாமதிக்காமல் எடுக்க முதல்வர் விக்கிக்கு சம்பந்தன் வற்புறுத்தல்



## எதிர்பார்க்கப்பட்டபடி உறுதிப்பாடு வழங்கவும் மறுப்பு

கொழும்பு, ஜூன் 19

வடமாகாண சபைச் சிக்கலுக்குத் தீர்வு காணும் முயற்சியாக, முன்னர் இடம்பெற்ற தவறுக்கான திருத்த நடவடிக்கையைத் தாமதியாது எடுக்குமாறு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனை, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கோரியிருக்கின்றார்.

இந்த விடயத்தை ஒட்டி முதல்வர் விக்னேஸ்வரன் கோரிய உறுதிப்பாட்டை வழங்குவதற்கு எதிர்பார்த்தபடி மறுப்புத் தெரிவித்துவிட்டார் சம்பந்தன்.

சம்பந்தன் அத்தகைய உறுதிப்பாட்டைத்தரமாட்டார் என்ற தகவலை 'காலைக் கதிர்' நேற்றே வெளியிட்டிருந்தது.

அதனை உறுதிப்படுத்தும் விதத்தில் நேற்று இரா.சம்பந்தன், முதல்வர் விக்னேஸ்வரனுக்கு அனுப்பி வைத்த கடிதம் அமைந்திருந்தது.

பக்கம் 18 >>>

# சம்பந்தனின் பதிலை சாதகமாகப் பரிசீலிக்க மூன்று தலைவர்கள் விக்கியிடம் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எழுதியுள்ள கடிதத்தில், அவர் குறிப்பிட்டுள்ள ஒரு சில அம்சங்களைச் சாதகமாகப் பரிசீலித்து அவற்றின் அடிப்படையில் இணக்கமான ஒரு தீர்வுக்கு – முடிவுக்கு – வருமாறு மூன்று கட்சிகளின்

பக்கம் 18 >>>

# வவுனியாவில் பொதுக் கட்டடம் ஒன்றில் கருணா கூட்டம் நடத்த அனுமதி மறுப்பு

## நீண்ட இழுபறிக்கு பின் கடைசியில் வீடொன்றில் கூட்டம்

வவுனியா, ஜூன் 19

வவுனியா – சிடாச்சூரியில் உள்ள பொதுநோக்கு மண்டபம் ஒன்றில் முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) பங்குபற்றும் கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெறவிருந்த நிலையில் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

பக்கம் 18 >>>



## துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர் கைது!

கொழும்பு, ஜூன் 19

எல்பிட்டிய – நுகேகொடை பிரதேசத்தில் 3 பேர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியமை மற்றும் தாக்குதல் நடத்தியமை தொடர்பிலான சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

எல்பிட்டிய பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அந்த நபர் கைது

பக்கம் 18 >>>

# இனமுறுகலைத் தோற்றுவித்த 14 பேர் இதுவரையில் கைதாம்!

கொழும்பு, ஜூன் 19

இலங்கையில் இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் சம்பவங்கள் தொடர்பாக இதுவரையில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரியந்த ஜயக்கொடி தெரிவித் துள்ளார்.

நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித் தார்.

கைதானவர்களில் பௌத்தர்கள் மட்டுமல்ல, இரு முஸ்லிம்களும், ஒரு தமிழரும் அடங்குகின்றனர்.

ஒரு பௌத்த மதகுரு மற்றும் பொலிஸாக பணிபுரிபவர் ஒருவர் உட்பட ஏனைய 11 பேரும் பௌத்தர்கள் என அவர் வெளியிட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த 11 பேரில் பலரும் பொது பல

பக்கம் 18 >>>

# மக்கள் கருத்துக்களை விரைந்துபெற முதல்வரின் தொடர்பாடல் அலுவலகம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

மக்களின் கருத்துக்களை விரைந்து பெற்றுக் கொள்ள ஏதுவாக மக்கள் தொடர்பாடல் அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் ஒரு சில நாள்களுக்குள் திறக்க வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் முடிவுசெய்துள்ளார்.

அதன் மூலம் மக்கள் தெரிவிக்கும் கருத்துக்களைத் தான் உடனுக்குடன் அறிந்துகொள்ள முடியும் என்றும் –

இது மக்களுடனான தனது நெருக்கத்தை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண மருத்துவர் குழு ஒன்று முதலமைச்சரைச் சந்தித்துள்ளது.

பக்கம் 18 >>>

அளப்பு அருணாசலம்



எப்படியெண்டாலும் தீர்வு வந்தாச் சரி..!

# 2 ஆயிரம் நட்சத்திர ஆமைகளுடன் இருவர் கற்பிட்டிப் பகுதியில் கைது



இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட 2,089 நட்சத்திர ஆமைகளை, நேற்றுத் தாங்கள் கைப்பற் றியுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர். புத்தளம், கற்பிட்டி, இப்பந்தீவுக் கடற் பகுதியில், சந்தேகத்துக்கிடமான

பக்கம் 18 >>>

# 'இன்னும் எவ்வளவு காலத்துக்கு சிறைவாசமோ?'

## இரா்ஜாங்க அமைச்சரிடம் தமிழ் அரசியல் கைதிகள் குமுறல்



நாங்கள் வருடக் கணக்கில் சிறையில் வாடுகிறோம். இந்தச் சிறை வாசம் எவ்வளவு காலத்துக்கு நீடிக்குமோ தெரியவில்லை.

-இவ்வாறு குமுறினர் தமிழ் அரசியல்வாதிகள் தம்மைச் சந்திக்க வந்திருந்த இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணனிடம்.

கண்டி - தும்பர போகம்பர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் மற்றும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் அடங்கிய குழுவினர் நேற்றுமுன்தினம் சென்று சந்தித்தனர். இதன் போதே தமிழ் அரசியல் கைதிகள் தங்களின் நிலைமையைக் கூறி குமுறினர்.

இதுதொடர்பில் அரசியல் கைதிகள் மேலும் தெரிவத்தவை வருமாறு:-

அரசியல் கைதிகள் ஒவ்வொருவர் மீதும் எட்டு தொடக்கம் 10 வரையிலான வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றன. இதன் தீர்ப்புகள் ஒவ்வொரு விதமாக வருவதால் தாங்கள் எவ்வளவு காலம் சிறை வாழ்க்கையை அனுபவிக்கப் போகின்றோம் என்று தெரியவில்லை .

அத்தோடு, போரின் பின்னர் தம்மை புனர்வாழ்வுக்கு உட்படுத்தவோ அல்லது விடுவிப்பது தொடர்பாகவோ கவனஞ் செலுத்தப்படுவதில்லை.- என்றனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமது பாதுகாப்பு, தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று தமிழ் அரசியல் கைதிகள் அவரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து,இவ்விடயம் தொடர்பாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் கலந்துரையாடுவதாகவும் ஒன்று அல்லது இரண்டு வருடசிறைத் தண்டனை பெற்றவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர் வாழ்வளிப்பு அமைச்சர் சுவாமிநாதனுடன் கலந்துரையாடுவதாகவும் இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.



## மஹிந்தவின் அடுத்த கூட்டம் திருமலையில்

கூட்டு எதிர்க்கட்சியால் அரசுக்கு எதிராக மாவட்ட ரீதியில் நடத்தும் அடுத்த பொதுக் கூட்டம் திருகோணமலையில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றவுள்ள இந்தக்கூட்டம் எதிர்வரும் ஜூலை 3 ஆம் திகதி மாபெரும் எதிர்ப்புக் கூட்டமாக நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

மீண்டும். ஒரு தடவை மக்களை ஒன்று கூட்டி கூட்டு எதிர்க்கட்சியினது பலத்தை நிருபிக்கப்போகிறேன் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மேதினத்தில் கூட்டு எதிர்க் கட்சியால் காலிமுகத்திடலில் நடத்தப்பட்ட கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் அரசியல் வட்டாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### கிளர்ச்சியில் ஈடுபடாதீர்கள்!

## சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி மைத்திரி எச்சரிக்கை!



கொழும்பு, ஜூன். 19


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய அரசுக்கு எதிராக உள்ளக ரீதியில் கிளர்ச்சி செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார் என்று கட்சியின் உள்வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நல்லாட்சி அரசுக்கு எதிராக விமர்சனங்கள் வெளியிடுவதை நிறுத்திக் கொள்ளுமாறு ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஒன்றிணைந்து செயற்பட்டு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முனைப்புக் காட்ட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம் என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.



உலக யோகா தினத்தையொட்டி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் மாணவர்களுக்கான யோகா பயிற்சிகள் வழங்கப்பட்டன.

# வடக்கு மாகாண சபையின் குழப்ப நிலையால் தமிழ் சமூகத்தின் எதிர்காலம் நெருக்கடியில்!

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் கூறுகிறார்

### முதலமைச்சர் பதவிக்கு ஏற்றவர் விக்கியே!



அண்மைக்காலமாக வட மாகாண சபைக்குள் நிலவி வரும் குழப்ப நிலையும் அதன் பின்னரான தீர்மானங்கள் மூலம் மாகாணசபைக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவும் தமிழ் பேசும் சமூகத்தின் எதிர்கால அரசியல் இருப்பை கேள்விக் குறியாக்கி உள்ளது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவருமான கே.காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபையில் ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலை தொடர்பாக தமது நிலைப்பாட்டை அறிவிக்கும் வகையில் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ் பேசும் மக்களின் பெரிய எதிர்பார்ப்புக்களுடன் உருவாக்கப்பட்ட இந்த வட மாகாண சபை ஊழலற்றதாக இருக்க வேண்டும் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். எனவே, முதலமைச்சர் என்ற வகையில் அவர் தனது கடமையைச் செய்திருக்கின்றார். மேலும் அதனையே மக்களும் விரும்புகின்றனர்.

அதே நேரத்தில் வட மாகாண சபைக்கு முதலமைச்சராக விக்னேஸ்வரனே பதவி வகிக்க வேண்டும். ஏனெனில் நாட்டில் சிறுபான்மையாகவும் வடக்கில் பெரும்பான்மையாகவும் வாழும்தமிழ்,முஸ்லிம் மக்கள் சார்பாக எடுக்கப்படும் எதிர்கால நலன் கருதிய தீர்மானங்களுக்கு என்னைப் பொறுத்தவரையில் மாகாண சபைக்கு சிறந்த தலைமைத்துவத்தைக் கொண்ட முதலமைச்சராக விக்னேஸ்வரன் காணப்படுகின்றார்.

மேலும், கடந்தகாலங்களில் நாட்டில் மிக முக்கியமான கௌரவமான பதவி வகித்த தமிழர் ஒருவரை தமிழ் சமூகமே வீட்டுக்கு அனுப்புவது பொருத்தமான ஒன்றல்ல. குற்றம் யார் இழைப்பினும் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. அந்த வகையில், முதலமைச்சர் தன் கடமையை சரிவரச் செய்திருக்கின்றார் என்றே கருதுகின்றேன். அத்துடன் முதலமைச்சரின் நடவடிக்கை ஏனைய மாகாணங்களுக்கும் ஒரு முன்னுதாரணமாகும்.

என்னுடைய ஆரம்பமும் வடக்கில் ஊழலுக்கு எதிரான அரசியல் பிரவேசமாகக் காணப்படுகின்றமையை மக்கள் அறிவர். அந்த வகையில் மாகாண சபை அமைச்சர்கள் மட்டுமன்றி மத்திய அரசில் அங்கம் வகிக் கும் அரசியல்வாதியாக இருந் தாலும் ஊழல் குற்றச்சாட்டுடன் தொடர்புபட்டிருப்பின் அவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தவறிழைக்காதவர்களுக்கு தண்டனைகளை வழங்கப்படக் கூடாது என்பதிலும் நான் உறுதியாக இருக்கின்றேன். இதுவே மக்களினதும் புத்தி ஜீவிகளினதும் எதிர்பார்ப்பாகும்.

அத்துடன், இந்த மாகாண சபை குழப்பநிலை காரணமாக மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட தமிழ் சமூகத்தின் தலைவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் இந்த விடயத்தில் ஒருசில விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டு மீண்டும் நாம் ஒற்றுமையான தமிழ் பேசும் சமூகம் என முன்னுதாரணம் காட்டுமளவுக்கு ஒரே கூரையின் கீழ் ஒன்றிணையுமாறு தான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.- என்றுள்ளது. (எ-100)

# இலுப்பைக்குளம் வித்தியாலயம் மூடப்பட்டமையால் பெரும் பாதிப்பு

## மாணவர் இடை விலகல் அதிகரிப்பு

வவுனியா, ஜூன் 19

வவுனியா – வடக்கு இலுப்பைக்குளம் வித்தியாலயம் மூடப்பட்டுள்ளதால் இப்பகுதியில் உள்ள மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது என பெற்றோர்கவலைவெளியிட்டுள்ளனர்.

தூர இடங்களில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்ல முடியாமல் மாணவர்கள் இடைவிலகி வருகின்றனர் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தரம்1முதல்தரம்5வரையான வகுப்புகளை கொண்டு இயங்கி வந்த இலுப்பைக்குளம் வித்தியாலயத்தில் கடந்த 2010ஆம் ஆண்டுமுதல்2014ஆம்ஆண்டு வரை50 இற்கும்மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். ஆனால் அங்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்பட்டது.

ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படாத காரணத்தால் அப்பாடசாலை மூடப்பட்டது.

பின் தங்கிய பிரதேசமாகிய மேற்படி பகுதியில் மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலையில் பாடசாலையை அவர்கள் மூடிய நடவடிக்கை தொடர்பாக கல்வியியலாளர்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். (ம)

# ஞானசாரதேரரை அமைச்சர் பாதுகாத்தார் என கூறுவது அரசியல் உள்நோக்கம் கொண்டதாம்!

கொழும்பு, ஜூன் 19

ஞானசார தேரரை அமைச்சர்கள் பாதுகாக்கின்றனர் எனக் கூறுவதன் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் இருக்கலாம் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிர தீப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயகொடி நேற்று தெரிவித்தார்.

நேற்றுப் பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் ஞானசார தேரரை அமைச்சர் ஒருவர் பாதுகாக்கின்றனர் எனச் சிலர் குற்றம் சுமத்துகின்றமை தொடர்பில் அவரிடன் வினவப்பட்டபோது பதிலளித்த அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இன, மத வாதங்களைத் தூண்டும் வண்ணம் கருத்து வெளியிடுகின்றனர் எனக் கூறப்படும் அரசியல்வாதிகள் பலர் தொடர்பில் சிறப்பு விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர் எனவும் சமூக வலைத்தளங்களில் இனவாதம், மத வாதம் பேசுவோர், பரப்புவோரை விசேட பொலிஸ் குழுவொன்று கண்காணிக்க ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் பிரியந்த ஜயகொடி நேற்றுத் தெரிவித்தார். (உ)

# சமாதான சுட்டெண் தரப்படுத்தலில் இலங்கைமுன்னேற்றமடைந்துள்ளது

## 163 நாடுகளில் இலங்கைக்கு 80 ஆவது இடம்

கொழும்பு ஜூன் 18

சர்வதேச சமாதான சுட்டெண் தரப்படுத்தல் வரிசையில் இலங்கை முன்னேற்றம் அடைந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையில் முன்னெடுக்கப்படும் நல்லாட்சியில் பல ஆரோக்கியமான அரசியல் மாற்றங்களாலேயே இந்த நிலை எட்டப்பட்டது என அரசதரப்பு தெரிவித்துள்ளது.

நாட்டில் நல்லிணக்கம் மற்றும் சமாதான முயற்சிகளிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அந்தவகையில், 163 உலக நாடுகள் மத்தியில் இலங்கை 80 ஆவது இடத்தை அடைந்துள்ளது. கடந்த வருடத்தோடு ஒப்பிடப்படுமிடத்து இலங்கை 17 நிலைகளால் முன்னேறியுள்ளது.

உலக சமாதான சுட்டெண் தரப்படுத்தில் ஐஸ்லாந்து முதலாவது இடத்தில் உள்ளது. ஆஸ்திரேலியாவின் பொருளாதார மற்றும் சமாதான ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றினால் இந்த சர்வதேச சமாதானம் தொடர்பான சுட்டெண் தரப்படுத்தல் வரிசை வெளியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# அமைச்சர் கயந்தவின் வாழைப்பழம்; சந்தேக நபர் விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு, ஜூன் 19

அமைச்சர் கயந்த கருணாதிலக்கவின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவை பொறித்த பொதிகளில் வெள்ள அனர்த்த சமயத்தில் வாழைப்பழம் விநியோகித்தார் எனக் கூறப்படும் நபரைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைக்கு அழைத்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அமைச்சர் கயந்த கருணாதிலக்க செய்த முறைப்பாட்டையடுத்து இவர் அழைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 28 ஆம் திகதியின் பின்னர் திணைக்களத்தில் ஆஜராவார் என குறித்த நபர் தனது சட்டத்தரணி ஊடாக திணைக்களத்துக்கு அறிவித்துள்ளார் எனத் தெரியவருகின்றது. (ம)

# கல்வியியல் கல்லூரிகளுக்கு நாளை புதிய மாணவர்கள்

## இணைக்க கல்வி அமைச்சு நடவடிக்கை

கொழும்பு ஜூன் 19

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு அனுமதி பெற்ற புதிய மாணவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை உள்வாங்கப்படவுள்ளனர்.

இதனடிப்படையில் நாடளாவிய ரீதியில் உள்ள கல்வியியல் கல்லூரிகளுக்கு நான்காயிரத்து 303 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இது விடயம் தொடர்பில் உரிய அறிவுறுத்தல் கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன என ஆசிரியர் கல்வி பிரதம ஆணையாளர் கே.எம்.எச். பண்டார தெரிவித்துள்ளார்.

அனுமதி பெற்ற மாணவர்களின் விவரங்கள் கல்வியமைச்சின் கல்வியியல் கல்லூரி இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன என ஆசிரியர் கல்வி பிரதம ஆணையாளர் கூறினார்.

இம்முறை கடந்த வருடத்தை விடக் கூடுதலான மாணவர்கள் கல்வியியல் கல்லூரிகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்றார் அவர்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் அடிப்படைக் கல்விச் செயற்பாடுகள் தொடர்பான பாடத்திட்டங்களும் கற்கை நெறியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கற்கை நெறிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் பத்துத்தினங்களுக்கு நிறுவனரீதியான ஆரம்பப்பயிற்சி வழங்கப்படும் என்று பண்டார மேலும் தெரிவித்தார். (ம)

## சம்பந்தனின்...

(18 ஆம்பக்கத் தொடர்ச்சி)

என்றும் –

“எவ்வாறாயினும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளில் எனது சாதகமான செல்வாக்கைப் பிரயோகிக்க முயலுவேன் என்ற உத்தரவாதத்தை உங்களுக்குத் தருகிறேன்.” – என்றும்

சம்பந்தன் தனது கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றமையைச் சாதகமாக எடுத்து, அவற்றின் அடிப்படையில் அவர் கோரிய திருத்த நடவடிக்கைகளைச் செய்வதற்கு இணங்கும்படி மேற்படி நேற்றிரவு சந்திப்பில் முதல்வரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

இந்தக் கருத்துக்களை உள்வாங்கிய முதலமைச்சர் அவற்றின் அடிப்படையில் நல்லதொரு முடிவைத் தாம் நாளை (இன்று) அறிவிப்பார் என்ற சாரப்படப்பதில் கூறி அவர்களை அனுப்பிவைத்தார் எனவும் தெரியவந்தது. (உ)

## திருத்த...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்து அதனைத் தங்களுக்குத் தெரிவித்தவேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எல்லாத் தலைவர்களின் முன்பாகவும் திரு. மாவை. சேனாதிராசாவிடம் 'வட மாகாண சபையின் நிர்வாகத்தை நடத்திச் செல்வதில் அவரது வழிகாட்டலும் அரசியல் ஆலோசனைகளும் உங்களுக்குத் தேவைப்படும்' என்பதாகக் கூறியிருந்தீர்கள். இது அவ்வாறே நிறைவேற்றப்பட்டதா என்பதைச் சிலவேளை நீங்கள் உங்களையே கேட்டுக் கொள்ளலாம்.

திரு.மாவை. சேனாதிராசா அவர்கள் எமது மக்களுக்காகவும் கட்சிக்காகவும் பல தியாகங்களைச் செய்த, அதிக துயரங்களை அனுபவித்த ஒரு தலைவராவார். இத்தகைய பெறுமதி வாய்ந்தவர்கள் ஓரங்கட்டப்படக் கூடாது.

எவ்வாறாயினும், இ.த.அ. கட்சியின் செயற்பாடுகளில் எனது சாதகமான செல்வாக்கைப் பிரயோகிக்க முயலுவேன் என்ற உத்தரவாதத்தை உங்களுக்குத் தருகின்றேன்.

தங்களால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள திருத்த நடவடிக்கைகள் தாமதியாது எடுக்கப்பட வேண்டும்.

உண்மையுள்ள,
இரா.சம்பந்தன்
தலைவர்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் நாவாந்துறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V.) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படும்.

இதன்படி, நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப. 11 மணி வரை புதிய குடியருப்பு சனசமூக நிலையம்–

மு.ப. 11 மணியிலிருந்து பி.ப. 1 மணி வரை அராலி வீதி, மானிப்பாய் ஓட்டுமடம் –

பி.ப. 2.30 மணியிலிருந்து 4 மணி வரை R.C. பாடசாலையடி, நாவலர் வீதி.

வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக 30 ரூபா செலுத்தப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பிரச்சினைக்கு...

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் புதிய அரசமைப்பு முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு, அவை இறுதிக் கட்டத்தை நெருங்கப் போகின்றன. வடக்கு மாகாண சபையின் தற்போதைய பதவிக் காலம் நிறைவுறுவதற்கு முன்னர் உத்தேச புதிய அரசமைப்பு நகல் தயாராகிவிடும்.

அது தொடர்பில்–குறிப்பாகச் சில சட்ட சரத்துக்கள் தொடர்பில் – மாகாண சபைகளின் கருத்துக்களை உள்வாங்குவது சட்ட ரீதியாகக் கட்டாயப்படுத்தப்படுவதாக அமையும் என அந்தவட்டாரங்கள் விளக்கின.

அத்தகைய சமயத்தில் மற்றைய எட்டு மாகாணங்களில் இருக்கின்றமை போல தமக்கு வாய்ப்பான ஒருவர் வடக்கு மாகாண சபையின் முதல்வராகவும் இருப்பதுதான் பொருத்தமானது எனச் சில தரப்புகள் எதிர்பார்க்கின்றனவாம். நீதியரசர் விக்னேஸ்வரன் போன்ற ஒருவர் இருந்தால் தங்களுக்கு அது இடைஞ்சலாக இருக்கும் எனக் கருதும் அத்தரப்புகள் அந்த அரசமைப்பு நகல் மாகாண சபைகளின் பரிசீலனைக்கு அனுப்பப்பட முன்னரே இந்தப் பதவியில் இருந்து விக்னேஸ்வரனை அகற்றிவிடத் துடியாய்த் துடிக்கின்றனவாம். அந்தத் தரப்புகளின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் விதத்தில் நடந்து கொள்ளாமல், தந்திரோபாயத்துடனும், அரசியல் சாணக்கியத்துடனும் நடந்து கொள்ளும்படி சம்பந்தப்பட்டோர் முதல்வரிடம் வினயமாகக் வேண்டிக் கொண்டனர் என்றும் தெரிகின்றது.

இதையடுத்தே, முதல்வர் சற்று விட்டுக் கொடுப்புடன் தனது வியூகத்தை மாற்றுவதற்கு இணங்கி வந்தார் எனக் கூறப்பட்டது.

அமைச்சர்கள் பதவியில் சத்தியலிங்கம், டெனீஸ்வரன் ஆகியோர் தொடர்வதற்குத் தாம் கோரிய உறுதிப்பாட்டுக் கடிதம் தொடர்பில் முதல்வர் வலியுறுத்தாமல் விடுவதற்கும் –

அவர்களை ஒரு மாத காலம் விடுமுறையில் செல்லும்படி தாம் விடுத்த கோரிக்கையைச் செயற்படுத்துவதில் சட்டரீதியான சாத்தியங்கள் குறைவாக இருப்பதனால் அதனைச் செயற்படுத்தாமல் விடுவதற்கும் –

முதல்வர் இணங்கக் கூடும் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)



பண்டத்தரிப்பு - பல்லசுட்டி காந்திஜி முன்பள்ளி ஆரம்பப் பிள்ளைப் பருவச் சிறார்களின் மழலைகள் விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றபோது, முன்பள்ளிச் சிறார்களின் பாண்ட் வாத்தியத்துடன் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், சிறார்களின் இடைவேளை இசையும் அசைவும் நிகழ்வையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.மேற்கு பிரதேச செயலக உதவி செயலாளர் திருமதி கிருஷ்ணவதனி செந்தூரன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சம்பந்தனின் பதில் கடிதம்

**வடக்கு மாகாண சபைப் பிரச்சினை ஒரு தீர்க்கமான கட்டத்தை எட்டியிருக்கின்றது.**

மாகாண சபை தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம், வடக்கு மாகாண முதலமைச்சர் சில உத்தர வாதங்களை - உறுதிப்பாட்டை - கோரியமையும், அதனைச் செய்ய முடியாது எனச் சம்பந்தன் பதிலளித்தமையும் உறுதியாகிவிட்டன.

தமது தற்போதைய - ஆகப் பிந்திய - கடிதத்தில் வார்த்தைகளுக்கு இடையில் சம்பந்தன் பல சொல்லாடல்களைப் புகுத்தியிருக்கின்றார் என்றே தோன்றுகின்றது. ஓய்வுபெற்ற நீதியரசரான விக்னேஸ்வரனுக்கு அவை தாராளமாகப் புரியும் என்பதில் சந்தேகமில்லை.

முதல்வர் விக்னேஸ்வரன் எதிர்பார்த்த உறுதிப்பாட்டைச் சம்பந்தன் தர மறுத்தார் என்பது மட்டுமே இந்தப் பதில் கடிதத்தில் மேம்போக்காகத் தெரியும். ஆனால், அதற்குள் பல விடயங்களை சம்பந்தன் புகுத்தியிருக்கின்றார் என்பது கவனிக்கத்தக்க அம்சமாகும். அவற்றை நோக்குவது இந்தக் கட்டத்தில் முக்கியமானதும் கூட.

✦ குற்றவாளிகளாகக் காணப்படாத இரு அமைச்சர்களுக்குத் தண்டனை வழங்க முற்பட்ட - இயற்கை நீதிக்கு மாறான - முதலமைச்சரின் நடவடிக்கையே இவ்வளவு குழப்பங்களும் எழக் காரணமாகும்.

✦ இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு மாறான முதல்வரின் நடவடிக்கையின் தொடர்ச்சியாக மாகாண சபையில் எழுந்துள்ள குழப்பநிலையை சீர்செய்வதற்கு ஒத்துழைக்கத் தயார் என்று குறிப்பிடும் சம்பந்தன், 'ஒரு சட்டரீதியான', 'சுதந்திரமான' விசாரணைக்குத் தடை எதனையும் ஏற்படுத்தக்கூடாது எனச் சம்பந்தப்பட்ட இரு அமைச்சர்களுக்கும் நிச்சயம் தாம் ஆலோசனை கூறுவார் என்றும் குறிப்பிடுகின்றார்.

இதன்மூலம், இந்த அமைச்சர்கள் தொடர்பில் முதல்வர் விக்னேஸ்வரன் முன்னெடுக்க வேண்டிய விசாரணை எத்தகையதாக அமைய வேண்டும் என்பதற்கான வரம்புகளையும் தெரியப்படுத்துகின்றார் சம்பந்தன்.

அந்த வகையில் பார்த்தால், ஏற்கனவே மற்றைய இரு அமைச்சர்களையும் குற்றவாளிகளாகக் கண்ட விசாரணைக்குழு சட்டரீதியானதா, சுதந்திரமானதா என்ற கேள்வி எழுகின்றது. அது, வெறும் ஆலோசனைச் சபைதான் - முதல்வருக்குப் பரிந்துரை செய்யும் குழுதான். அதனைக் குற்றத்தைத் தீர்மானிக்கும் வலுவுடைய கட்டமைப்பாக ஏற்கலாமா, அதனடிப்படையில் இருவரையும் குற்றம் இழைத்தவர்கள் என்ற சாரப்பட குறிப்பிடலாமா என்பவை போன்ற கேள்விகளும் எழுகின்றன.

மாகாண சபை நடைமுறைகளைப் பொறுத்தவரை மாகாண சபை உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக்குழு ஒன்றே சட்டரீதியானதாக இருக்கும். அதனைத்தான் சம்பந்தன் குறிப்பிடுகின்றாரா என்பது சிந்திக்கத்தக்கதே.

✦ இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசா இருக்கத்தக்க நிலையில், அக்கட்சியில் சம்பந்தன் செல்வாக்குச் செலுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளதாகக் குறிப்பிடுவதன் மூலம் நீதியரசர் விக்னேஸ்வரன் எதைக் கூற முயன்றாரோ அதற்குத் தகுந்த பதிலை உரிய அரசியல் நாகரிகத்தோடு சம்பந்தன் வழங்கியிருக்கின்றார்.

வடமாகாணத்துக்கான முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் தெரிவுசெய்யப்பட்ட சமயத்தில் கூட்டமைப்பின் மற்றைய தலைவர்களை வைத்துக்கொண்டு தமிழரசுக் கட்சித் தலைவர் சேனாதிராசாவை நோக்கி விக்னேஸ்வரன் கூறிய சொல்லாடல்களைச் சம்பந்தன் இந்தக் கடிதத்தில் விக்னேஸ்வரனுக்கு நினைவுபடுத்தியிருக்கின்றார்.

இந்த நினைவுபடுத்தலின் பின்புலத்தில்தான், தமிழரசுக் கட்சியில் சம்பந்தன் செல்வாக்குச் செலுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது என்ற விக்னேஸ்வரனின் கோரிக்கை வந்திருப்பதைச் சம்பந்தன் சுட்டிக்காட்டுகின்றார்.

"முதல்வர் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சமயம், 'வடமாகாண சபையின் நிர்வாகத்தை நடத்திச் செல்வதற்கு மாவையின் வழிகாட்டலும் அரசியல் ஆலோசனைகளும் எனக்குத் தேவை' என்று கூறியவர் நீங்கள். இது அவ்வாறாக நிறைவேற்றப்பட்டதா என்பதை உங்களையே கேட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்." - என்று முதல்வருக்கு நினைவூட்டிக் கேட்பதன் மூலம் பிரச்சினையின் ஆரம்பம் - தொடக்கம் - எங்கே என்பதைச் சுட்டிக்காட்ட விழைகிறார் மூத்த தலைவர் சம்பந்தன்.

"மக்களுக்காகவும் கட்சிக்காகவும் பல தியாகங்களைச் செய்த - அதிக துயரங்களை அனுபவித்த - ஒரு தலைவர். இத்தகைய பெறுமதி வாய்ந்தவர்கள் ஓரங்கட்டப்படக்கூடாது." - என்று மாவை குறித்து சம்பந்தன் கூறுகின்றமையில் அர்த்தம் உண்டு.

இப்போது 'தமிழரின் தேசியத் தலைவர்' போல எழுச்சி கொள்ளும் விக்னேஸ்வரன் இந்த எழுச்சிக்காகச் சுமந்த விழுப்புண்கள் யாவை என்று சம்பந்தன் கேட்கின்றமை போல அமைந்துள்ளது இந்த வாசகம்.

எது, எப்படியென்றாலும், தற்போது எழுந்துள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முதல் நடவடிக்கை எதுவாக இருக்க முடியும் என்பதைத் தனது கடிதத்தின் முத்தாய்ப்பாக முன் வைக்கிறார் சம்பந்தன்.

"தங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த நடவடிக்கைகள் தாமதியாது எடுக்கப்பட வேண்டும்." - என்பதே அது.

குற்றவாளிகளாகக் காணப்படாத இரு அமைச்சர்களுக்குத் தண்டனை தரும் விதத்தில் தாம் விடுத்த அறிவிப்பை முதல்வர் வாபஸ் பெறவேண்டும் என்பதுதான், சம்பந்தன் திரும்பத் திரும்பக் கூறும் திருத்த நடவடிக்கை. அது முதல்வருக்கு புரிந்தால் நல்லது.

முதல்வரை இன்று சூழ்ந்து நிற்கும் கூட்டம் அவர் இதனைப் புரிந்துகொள்ள அனுமதிக்குமா என்பது பெரும் கேள்வியே!

# கொழும்பில் குவிந்துள்ள குப்பைகளை துரிதமாக அகற்றுமாறு ஆலோசனை

## பிரதமர் பல இடங்களுக்கும் நேரில் சென்று பார்வையிட்ட பின்னர்

கொழும்பு, ஜூன் 19

கொழும்பு நகரில் பல இடங்களில் சேர்ந்துள்ள குப்பைகளைத் துரிதமாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மாநகர ஆணையாளருக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொழும்பு நகரில் பல இடங்களில் குப்பைகள் சேர்ந்துள்ளதால், ஏற்பட்டுள்ள பிரச்சினை சம்பந்தமாக ஆராயப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை புறக்கோட்டைப் பகுதியில் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

போதிராஜா மாவத்தை மற்றும் புறக்கோட்டை மத்திய பஸ் நிலையம் ஆகிய பகுதிகளில் சேர்ந்துள்ள குப்பைகளைப் பிரதமர் பார்வையிட்டார். குப்பைகள் கொட்டப்படும் இடங்களை முறையாகவும் அருகில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவகையிலும் அப்புறப்படுத்த வேண்டும் எனவும் பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, அமைச்சர்கள் சாகல ரத்நாயக்க, நிமல் சிறிபால டி சில்வா, ரவி கருணா நாயக்க, கொழும்பு மாநகர ஆணையாளர் வி.கே. அனுர ஆகியோரும் பிரதமருடன் சென்றிருந்தனர். (ச)

# மலையக பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு மூவாயிரம் ஆசிரியரை உள்வாங்க அனுமதி

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

மலையக பெருந்தோட்டப் பாடசாலைகளுக்குதிறமையான ஆசிரியர்கள் 3 ஆயிரம் பேரை உள்வாங்குவதற்கான அனுமதியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார். இது தொடர்பான பேச்சு ஒன்று எதிர்வரும் தினங்களில் நடைபெற உள்ளது.

அதனைத் தொடர்ந்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு அதன் மூலமாக ஆசிரியர்கள் உள்வாங்கப்பட உள்ளனர் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கண்டி கெங்கல்லை தமிழ் வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 8 வகுப்பறைகளைக் கொண்ட இரண்டு மாடிக்கட்டடத்தை நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் பொழுதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யார் ஆட்சி செய்தாலும் எமக்கு அதில் பிரச்சினை இல்லை. ஆனால், அவர்களிடம் இருந்து எமது சமூகத்துக்கான அனைத்துத் தேவைகளையும் உரிமைகளையும் பெற்றுக் கொடுக்கவேண்டிய பொறுப்பு ஆட்சியாளர்களுடன் இணைந்திருப்பவர்களின் கரங்களிலேயே தங்கியிருக்கின்றது.

அந்த வகையிலேயே அண்மையில் பிரதமரைச் சந்தித்த போது ஆசிரியர் பற்றாக்குறையே பெரும் பிரச்சினையாக இருக்கின்றது என்று தெரிவித்திருந்தேன்.

அதற்கு அவர் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இது தொடர்பாகக் கலந்துரையாடி ஆசிரியர்களை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில் எதிர்வரும் 28 ஆம் திகதி இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. அதன் பின்பு வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக ஆசிரியர்களை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். - என்றார். (எ)

# வாக்காளர் பதிவு திருத்தப் படிவம் உடனடியாக நிரப்பி கையளியுங்கள்!

## 'பவ்ரல்' பணிப்பாளர் கோரிக்கை

PAFFREL

கொழும்பு, ஜூன் 19

2017 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் திருத்தத்துக்கு அமைய பீ.சி. படிவங்களை துரிதமாக நிரப்பி கிராமசேவையாளர்களிடம் கையளிக்குமாறு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் பொதுமக்களிடம் கோரியுள்ளது.

இதுதொடர்பில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தவை வருமாறு:-

எதிர்காலங்களில் நடைபெறவுள்ள அனைத்துத் தேர்தல்களிலும் 2017 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலை பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, வாக்காளர்கள் இந்தப் பதிவுகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

2017 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியல் திருத்தத்துக்கு அமைய பீ.சி.படிவங்கள் வாக்காளர்களுக்கு தற்போதும் விநியோகிக்கப்படாதிருந்தால் கிராமசேவையாளர்களை அணுகி அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். - என்றார்.

# பொதுப்போக்குவரத்து பஸ்களுக்கு அடுத்த மாதம் முதல் கடும் சட்டம்

## போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 19

தூர இடங்களுக்கான பொது மக்கள் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களுக்கான சட்டத்தைக் கடுமையாக்கப் போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பில் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தூர இடங்களுக்குப் பிரயாணத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ்கள் உரிய நிறுத்தத்தில் அன்றி வேறிடத்தில் நிறுத்தினால் அந்த பஸ்களின் போக்கு வரத்து அனுமதிப் பத்திரம் ரத்துச் செய்யப்படும்.

இந்நடவடிக்கை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் முன்னெடுக்கப்பட உள்ளது.

இதுதொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. - என்றார். (எ)

## நாளை

20.06.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : அசுவினி பிப. 12.16 வரை
திதி : ஏகாதசி பப. 06.45 வரை
சுபநேரம் : 10.24 - 11.54 வரை
இராகுகாலம் : 02.54 - 04.24 வரை

# பெரியளவில் கடன் பெற்றுள்ளது அரசு

கொழும்பு, ஜூன் 19
அரசு பெரியளவில் கடன் பெற்றுக் கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் மொத்தமாக பெற்றுக் கொள்ளக்கூடிய கடன்களில் 80 வீதமான கடனை தற்போதே பெற்றுக் கொண்டுள்ளதாக மத்திய வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதல் ஆறு மாதங்களில் கூடுதலான கடன் பெற்றுக்கொண்டமையால் எதிர்வரும் ஆறு மாத காலப் பகுதியில் அரசு பெரிய நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் அரசால் பெற்றுக் கொள்ளக் கூடிய உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் தொகை 15 கோடி 79 லட்சம் ரூபா என்று வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரையில் அரசு ஆயிரம் கோடி 250 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. எதிர்வரும் ஆறு மாத காலத்துக்கு பெற்றுக் கொள்ளக் கூடிய கடனின் தொகை வெறும் முந்நூறு கோடி 25 லட்சம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கு, கிழக்கு நிலைமைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துதல் அவசியம்!

## ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு



வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவ்வாறான நிலைமைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படுவது அவசியம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி உனா மெக்குலே தெரிவித்துள்ளார்.

வடக்குக்கு விஜயம் செய்த அவர், கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆளுநரை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தேன். அதன்போது, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணிப் பிரச்சினை, அபிவிருத்தி என்பன தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

ஐ.நா. இலங்கையின் இடைக்கால நீதி முறைமை மட்டுமன்றி அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான செயற்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தும்.

அதேவேளை, தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் வடக்கு, கிழக்கில் நிலவும் வறட்சி நிலைகள் என்பன தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.- என்றார். (எ)

# கட்சிக்குள்ளிருந்தே தலைமைகளுக்கு துரோகம் இழைக்கின்றார் மஹிந்த!

## சாடுகிறார் சமூக நலன்புரி அமைச்சர் திஸாநாயக்க



கொழும்பு, ஜூன் 19
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கட்சிக்கும் கட்சியின் தலைமைக்கும் துரோகம் செய்கின்றார். இது சிறந்த காரியம் அல்ல என்று சமூகநலன்புரி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி போகம்பரை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கண்டி மாவட்ட இளைஞர் விளையாட்டு விழாவின் இறுதியில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் வலது சாரிகள், இடதுசாரிகள், இனவாதிகள், சகல இனங்களுடன் நட்புறவுடன் இருப்பவர்கள் எனப் பல தரப்பட்டவர்களும் உள்ளனர்.

பல்வேறு நிலைப்பாடுகளைக் கொண்டவர்கள் கட்சிக்குள் எப்போதும் இருந்துள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை மஹிந்த ராஜபக்ஷவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைத்தார்.

இது கட்சி எடுத்த முடிவல்ல. மஹிந்த தானே முடிவு செய்து கட்சியை மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைத்தார்.

கட்சியை ஒப்படைத்தமை போன்று ஜனாதிபதிக்கு ஒத்துழைப்புகளை வழங்க மஹிந்த ஒழுக்கம் உள்ளவராக இருக்க வேண்டும்.

எனினும், அவர் கட்சிக்குள் இருந்து கொண்டு கட்சிக்கும் கட்சியின் தலைமைக்கும் துரோகம் செய்து வருகிறார் -என்றார். (எ)

# கிறிஸ்தவ ஆலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை

## மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 19
கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க ஆலயங்கள் மீது அண்மைக்காலமாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படும் கருத்துக்களில் எவ்வித உண்மையுமில்லை என்று கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நாட்டில் இனவாதிகளினால் கிறிஸ்தவர்களின் ஆலயங்களும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாக பல்வேறுபட்ட தகவல்கள், வதந்திகள் பரவி வருகின்றன. இது தொடர்பில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒவ்வொரு தரப்பினரையும் தாக்குவதற்கும், தாழ்வாக கவனிப்பதற்கும் மதங்களைக் கைப்பொம்மையாகப் பயன்படுத்த வேண்டாம். மதங்கள் மனிதர்களிடையே ஒற்றுமைகளை வளர்க்க வேண்டுமே தவிர வன்முறைகளை ஏற்படுத்த இடமளிக்கக் கூடாது.

இவை குறித்து ஆரம்பத்திலேயே அவதானிக்கப்படுவதுடன், மேலும் அவை வளர்வதற்கும் இடமளிக்கக் கூடாது. இவ்வாறான இனவாதச் செயற்பாடுகளை மேற்கொள்வார்களானால் அது நாட்டுக்கு இழைக்கப்படும் துரோகம் ஆகும். -என்றார். (எ)

# தமிழக மீனவர் 5 பேர் கைது

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 5 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த மீனவர்கள் நேற்று அதிகாலை காங்கேசன்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் பயணித்த படகு ஒன்றும் கடற்படையினரால் பறிமுதல்செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்த மீனவர்களை யாழ்ப்பாணம் நீரியல்வள திணைக்களத்தில் ஒப்படைக்கவுள்ளோம் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். நீரியல்வள திணைக்களத்தில் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் மீனவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# சீரற்ற காலநிலையால் மின்சார சபைக்கு 22 கோடி ரூபா நஷ்டம்

நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக இலங்கைமின்சாரசபைக்கு 22 கோடி 8 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மின் சக்தி மற்றும் புதுப்பிக்கத் தக்க சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

மழையுடனான கால நிலையின் போது மாத்தறை மின்சார உப நிலையங்களுக்கு ஏற்பட்ட சேதங்களே இதற்கான காரணம் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேபோன்று பல பிரதேசங்களில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக மின்சார உபநிலையங்கள் மற்றும் மின்மாற்றிகள் என்பனவும் சேதமடைந்துள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெற்ற தையல் கண்காட்சி





தென்மராட்சி விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தின் தையல்கண்காட்சிநிகழ்வுகள் நேற்று முற்பகல் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன.

விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தின் முதல்வர் க.அருந்தவபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் கலந்து கொண்டு கண்காட்சியை நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

6 மாத தையல் பயிற்சி நெறிகளை பூர்த்திசெய்த மாணவிகளுக்கு விடிவெள்ளி அமையத்தின் ஊடாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கண்காட்சி நிறைவில் விடிவெள்ளி அமைய மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட காட்சிப் பொருட்களான புத்தகப்பொதிகள், ஆடைகள், கைப்பைகள் போன்றன விற்பனை செய்யப்பட்டன.

நிகழ்வில் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், நகராட்சிமன்ற முன்னாள் உறுப்பினர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர்கலந்து கொண்டனர். (ஏ-21)

## திருக்கோவிலில் இளைஞர் மீது வாள்வெட்டு!


திருக்கோவில்பொலிஸ் பிரிவுக்குஉட்பட்ட காயத் திரி கிராமத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வாள்வெட்டுத் தாக்குதலுக்கு உள்ளாகி இளைஞர் ஒருவர் படு காயமடைந்தார்.

திருக்கோவில் முத லாம் குறிச்சியைச் சேர்ந்த யோ.வதனராஜ் (வயது-22) என்ற இளைஞரே காயம் அடைந்தவர் ஆவார்.

பிரஸ்தாபஇளைஞன், மாணிக்கப் பிள்ளையார் முன்வீதியிலுள்ள தனது வீட்டிலிருந்து, சகோதரியு டன் மரண வீடு ஒன்றுக் குச் செல்லும் போதே அவர் வாள்வெட்டுக்கு இலக்கானார்.

இந்த வாள்வெட்டை மேற்கொண்டார் என சந்தேகிக்கப்படும் நபர் தற்போது தலைமறைவாகி உள்ளார் எனத் தெரிவிக் கப்படுகிறது. (ச)

# வடக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினை சமரசமாகத் தீர்க்கப்பட வேண்டும்!



## ஸ்ரீநேசன் எம்.பி. வலியுறுத்து

மட்டக்களப்பு, ஜூன் 19

எதிர்காலத்தில் தமிழ் மக்களின் நம்பிக்கை யைப் பெற்றுக்கொண்டு வழிநடத்தும் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு இருக்க வேண் டும். இந்த அடிப்படை யில், வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினை சமரசமாகத் தீர்க்கப்பட வேண்டும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித் தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்ற ஊட கவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண் டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

ஊழல் குற்றச்சாட்டு கள் முன்வைக்கப்படின், அதில் ஈடுபட்டவர்கள் தார்மீகமாக விலகிச் செல்ல வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தி யில் உள்ளது. இந்த விசா ரணை பக்கச்சார்பில்லா மல் நடுநிலையாக இருக் கும் பட்சத்தில் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதில் தாம தம் இருக்கக்கூடாது.

நான்கு அமைச்சர் களையும் வழி நடத்திச் செல்கின்றவர் என்ற வகையில், வடமாகாண முதலமைச்சர் சி.வீ. விக் னேஸ்வரனுக்கு சில தார் மீகப் பொறுப்புகள் இருக் கின்றன. அமைச்சர் ஒரு வர் மீது சில குற்றச்சாட் டுகள் முன்வைக்கப்படும் போது, சிறு கருத்துப் பரிமாறல்களுடன் அவர் முளையில் கிள்ளி எறிந் திருக்கலாம். ஒட்டு மொத் தமாக நான்கு பேரையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும் நிலைமை ஏற் படும் பட்சத்தில், மேற் பார்வையில் குறைபாடு கள் இருக்கின்றனவா? அல்லது கட்டுப்படுத்து வதற்கு தாமதமாகியுள் ளதா? போன்ற கேள்வி கள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் புத்தி ஜீவி என்ற அடிப்படை யில், அமைச்சர்களை ஒன்றிணைத்து வழிகாட் டியாக நடத்திச்செல்லும் தலைமைப்பீடத்தில்உள் ளார். இந்தப் பிரச்சினை யைச் சமரசமாகத் தீர்க்க வேண்டும் . ஏனெனில், தமிழர்களின் பலமாகக் காணப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடையக்கூடாது.- என் றார். (ச)

# வடமாகாண சபை குழப்பங்களுக்கு நல்லாட்சி அரசுதான் பின்னணி!

## யோகேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு

வந்தாறுமூலை,ஜூன்19

சர்வதேசத்தின் பார் வைக்குட்பட்ட வடமா காண சபையில், குழப் பங்கள் ஏற்படுவதற்கு நல்லாட்சி அரசுதான் பின்னணியாகச் செயற் படுகிறது.

-இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் சீ.யோகேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு - வந் தாறுமூலை மாருதி பாலர் பாடசாலையின் வரு டாந்த விளையாட்டுப் போட்டி நேற்றுமுன் தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

நாட்டில் தற்போது தமிழ் மக்களுக்கு அரசி யல் ரீதியான தீர்வு வழங்க வேண்டிய கட்டா யத்தில் அரசு உள்ளது. சர்வதேசத்தின் திணிப் புக் காரணமாக தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற் பட்டுள்ளது. இந்த நிலை யில், தமிழ் மக்கள் மத்தி யில் குழப்பத்தை ஏற்படுத் துவதற்குஅரசுபின்னணி யாகச் செயற்படுகிறது.

தமிழ் மக்களின் விடு தலைக்காக தோன்றிய சகல இயங்கங்களும் ஒற் றுமையாக செயற்பட்டவர லாறு இல்லை. அதே போன்றே வடமாகாண சபையில் ஒற்றுமை சீர் குலைந்த நிலைமை காணப்படுகிறது.தற்போது வடமாகாணத்தில்ஏற்பட் டுள்ள பிரச்சினை, அனைத்து மக்களின் மனங்களையும் பாதித் துள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்ட மைப்பு ஒன்றுபட்டு ஆட்சி செய்யும் வடமா காண சபையைச் சீர் குலைக்க இடமளிக்க முடியாது. யார் ஊழல் செய்தாலும் குற்றவாளி கள் தண்டிக்கப்பட வேண்டும். ஊழல் செய் வதற்கு எந்தக் கட்சிக்கும் இடமளிக்க முடியாது.

இதேவேளை,கிழக்கு மாகாணசபையில் கடந்த ஆட்சிக்காலத்தில்கொரியா நாட்டுக்கு அனுப்புகி றோம் எனக்கூறி பண மோசடிகள் நடைபெற் றுள்ளன. கிழக்கு மாகாண சபையில் முன் னைய ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற பல தவறு கள் மூடி மறைக்கப்பட் டுள்ளன.-என்றார். (ச)

## மட்டு.நகரில் இரு விபத்துக்கள்; இரண்டு பேர் படுகாயம்!

மட்டக்களப்பு மாவட்டத்தின் இருவேறு பகுதி களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்துக்களில் இருவர் படுகாயமடைந்தனர்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளை பிரதேசசபைக்கு முன்பாக வான் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக் குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்துள்ளார். இவர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

களுதாவளைப் பகுதியை சேர்ந்த யோ.லவன் (வயது-28 )என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

இதேவேளை, வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலையடிவட்டையில் ஓட்டோவு டன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளான தில், ஒருவர் படுகாயமடைந்தார். பாலையடிவட் டையை சேர்ந்த சா.உதயகுமார் (வயது-32)என் பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

இவர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டுள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த இரண்டு விபத்துச் சம்பவங் கள் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 21 ஆவது பட்டமளிப்பு விழா!

## நேற்று புதிய வேந்தர் தலைமையில்







மட்டக்களப்பு, ஜூன் 19

கிழக்கு பல்கலைக் கழகத் தின் 21 ஆவது பொதுப்பட்ட மளிப்பு விழா புதிய வேந்தர் வைத்தியகலாநிதி வேல்முருகு விவேகானந்தராஜா தலை மையில் மட்டக்களப்பு - வந் தாறுமூலை வளாக நல்லையா மண்டபத்தில் நேற்று ஞாயிற் றுக்கிழமை காலை இடம் பெற்றது.

கலைகலாசார பீடம், சௌக் கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம், சித்த மருத்துவக் கற்கை கள் பிரிவு, வணிக முகாமைத் துவப் பீடம், விவசாயபீடம், தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், சுவாமி விபு லாநந்தா அழகியல் கற்கைகள் நிறுவனம் ஆகியவற்றில் பட்டப்படிப்பை மேற்கொண்ட வர்கள் பட்டங்களைப் பெற் றனர்.

அதிகூடிய அளவாக கலை கலாசாரத்துறைகளில் கற்ற 450 பேரும், வைத்தியத்துறை யில் 50 பேரும், விவசாயத் துறையில் 11 பேரும், சித்த மருத்துவத்துறையில்10 பேரும் பட்டம் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் கலாநிதி தங்கமுத்து ஜெயசிங்கம், விரிவுரையாளர் கள், பட்டதாரி மாணவர்கள், அவர்களது பெற்றோர், உறவி னர்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர். (ச)

# சிலரின் தவறான நடைமுறை காரணமாக நாடாளுமன்றக் கௌரவத்துக்கு இழுக்கு!

## சபைக்கு வரும் ஊடகவியலாளருக்கான செயலமர்வில் சபாநாயகர்



கொழும்பு, ஜூன் 19

சிலரது தவறான நடைமுறை காரணமாக நாடாளுமன்றத்தின் கௌரவத்துக்கு பெரிய இழுக்கு ஏற்பட்டிருப்பதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற ஊடகவியலாளர்களுக்காக நேற்று முன்தினம் நீர்கொழும்பில் நடைபெற்ற செயலமர்விலேயே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற ஊடகவியலாளர்களின் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கில் நாடாளுமன்றம் இந்தச் செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தது.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தத் தவறுகளை சரி செய்து சரியான வழியில் இட்டுச் செல்வது ஊடகவியலாளர்களுக்கு உள்ள பொறுப்பாகும்.

சிலர் நாடாளுமன்றத்தில் முறைகேடாக நடந்து கொள்கின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. இதனை நிறுத்துவதற்கு ஊடகவியலாளர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டை நல் வழியில் இட்டுச் செல்வதற்கு நாடாளுமன்றம் வலுவூட்டப்பட வேண்டும். தெரிவுக் குழுக்களின் பங்களிப்புடன் கோப் குழுவின் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசமைப்பு ஒன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. தகவல்களை அறிந்து கொள்ளும் சட்டத்தின் மூலம் புதிய யுகம் ஒன்று நாட்டில் ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்கு 70 வருடங்கள் நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி சார்க் அமைப்பின் சபாநாயகர்கள் தலைமையில் விசேட அமர்வு ஒன்று இடம்பெறவுள்ளது.

முழுமையான ஊடக மத்திய நிலையம் ஒன்று நாடாளுமன்றத்தில் ஏற்படுத்தப்படும். நாடாளுமன்றத்தை சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டான நாடாளுமன்றமாகத் தரமுயர்த்துவதே இதன் நோக்கம். - என்றார் சபாநாயகர்.

## டெங்கை ஒழித்துக்கட்ட வலுவான சட்டங்கள்!

### சுகாதார அமைச்சர் ராஜித தெரிவிப்பு

டெங்கு நோயை ஒழிப்பதற்கான சட்டங்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

டெங்கு நுளம்புகள் பரவக் கூடிய வகையில் சுற்றாடலை வைத்திருக்கும் நபர்களுக்கு எதிராக 5 ஆயிரம் ரூபாவிலிருந்து 25 ஆயிரம் ரூபா வரையில் தண்டப் பணம் அறவிடப்படும்.

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற விசேட பேச்சின் போது இது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன், கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது நிலவும் கால நிலைக்கு மத்தியில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் டெங்கு மேலும் அதிகரிக்கக்கூடும். இதனால், இது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும்.

டெங்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்காக நவீன தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக ஆஸ்திரேலியப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து டெங்கு ஒழிப்புக்கான பக்ரீரியா ஒன்றை நாட்டில் விரிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதத்தில் நாட்டுக்கு விஜயம் செய்யவுள்ள ஆஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சருடன் இது தொடர்பாகப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட உள்ளது.

சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் டெங்கு நோய் ஒழிப்பு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. டெங்கு நோய் தீவிரமாகப் பரவுவதைக் கட்டுப்படுத்த அனைவரின் ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் அவசியம். இதற்காக இராணுவத்தினரின் உதவி பெற்றுக் கொள்ளப்பட உள்ளது. - என்றார். (எ)

## சோழர்கால அரசர்கள் பாவித்தமை போன்ற சிம்மாசனம் வடக்கு அவைத் தலைவருக்கு!

வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவருக்காக நுட்பமான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய புதிய சிம்மாசனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற வடக்கு மாகாணசபையின் அமர்வில், அந்தப் புதிய சிம்மாசனத்தில், அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் அமர்ந்திருந்தார்.

இதுதொடர்பில் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ள கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று, சோழர் கால அரசர்கள் பயன் படுத்தியமையைப் போன்ற ஆசனத்தை மாகாண சபையின் உயர் அதிகாரி ஒருவர் பெற்றுள்ளார் என்று குறிப்பிட்டிருக்கிறது. (எ)





இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாடசாலை உபகரணங்களை வழங்கினார். மாத்தறைக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த பிரதமர் தெனியாய பல்லேகம மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 249 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கினார்.

## விரைவில் மாற்றம் இலங்கையின் நிலப்பரப்பில்!

கொழும்பு, ஜூன் 19

நாட்டில் தற்போது மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் காரணமாக இலங்கையில் நிலப் பரப்பு விரைவில் மாற்றம் அடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நில அளவையாளர் திணைக்களம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, 65 ஆயிரத்து 610 வர்க்க பரப்பைக் கொண்டுள்ள இலங்கையின் நிலப் பரப்பு இரண்டு வர்க்க பரப்பால் அதிகரிக்கும் என்று நில அளவையாளர் பீ.என்.பீ உதயகாந்த தெரிவித்துள்ளார்.

## சுனாமி மிதவையின் தரவு வழங்கல் நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 19

சுனாமி எச்சரிக்கை தொடர்பில் முன்னரே அறிந்து கொள்வதற்காக பெருங்கடலில் பொருத்தப்பட்டுள்ள சுனாமி மிதவை தரவு வழங்குவதை நிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி முதல் இந்த தரவு வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

அந்தமான் தீவுக்கு அருகில் சர்வதேச கடல் எல்லையின் பெருங்கடல் பகுதியில் இந்தத் தரவு மிதவை பொருத்தப்பட்டுள்ளது.

எனினும், அது தற்போது காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய சுனாமி எச்சரிக்கை தொடர்பில் விசேட செயற்பாடுகளை மேற்கொண்ட மிதவை அல்லது அதன் ஒரு பகுதி தொடர்பில் தகவல் அறிந்தால் 0719353009 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக நாரா நிறுவனத்தின் பிரதிநிதியிடம் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறு அதன் ஒரு பகுதியைக் கண்டுபிடிக்க முடிந்தாலும், அதற்கு முன்னர் பொருத்தப்பட்ட இடத்திலேயே மீண்டும் பொருத்த முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# கந்தளாய் பொலிஸாரை தாக்கிய குற்றச்சாட்டில் பெண்கள் இருவர் உட்பட ஐந்து பேர் கைது!

கொழும்பு, ஜூன் 19

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் பெண்கள் இருவர் உட்பட ஐந்து பேரை இம் மாதம் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் துசித்த தம்மிக்க உத்தரவிட்டார்.

கந்தளாய், வென்ராசன்புர மற்றும் 91ஆம் கட்டைப் பகுதிகளைச் சேர்ந்த ஐவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கந்தளாய், அரச மரச் சந்திப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையிலான மோதலின் போது, பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரிலேயே இந்தச் சந்தேக நபர்கள் ஐவரையும்கடந்தவியாழக்கிழமை கைது செய்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (உ)

# பொய் உரைத்த சட்டத்தரணி டயஸ் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்

## நீதி அமைச்சர் இறுக்கமான உத்தரவு

கொழும்பு, ஜூன் 19

தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பொய்யான கருத்தைக் கூறிய சட்டத்தரணி லக்சான் டயஸ் 24 மணி நேரத்திற்குள் நாட்டு மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஒரு மாத காலத்திற்குள் 166 கிறிஸ்தவ ஆலயங்களை பிக்குமார் தாக்கினர் எனத் தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒன்றின்போது சட்டத்தரணி லக்சான் டயஸ் கூறியிருந்தார்.

இது குறித்து பேராயர் மல் கம் ரஞ்சித் ஆண்டகையிடம் கேட்டபோது அப்படியான தாக்குதல்கள் நடைபெறவில்லை என அவர் கூறினார் எனவும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொய்யான தகவலைக் கூறியமைக்காகச் சட்டத்தரணி மன்னிப்புக் கோர வேண்டும். இல்லை யேல் சட்டத் தொழிலில் இருந்து அவரை வெளியேற்றத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச் சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறினார். மாங்குளத்தில் புதிய நீதிமன்றக் கட்டடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையிலேயே விஜயதாஸ ராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.

மேலும், இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் மற்றும் விரோதத்தை ஏற்படுத்தும் கருத்துக்களைத் தான் கடுமையாக நிராகரிக்கிறார் எனவும் அவர் கூறியுள்ளார். (ம)

## தினசரி ராசி பலன் 19.06.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 5 ஆம் நாள். தசமித் திதி இரவு 1.12 மணி வரை. பின்னர் ஏகாதசி. நட்சத்திரம்: ரேவதி மாலை 5.26 மணி வரை. பின்னர் அச்சுவினி. சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: காலை 7.27 மணி முதல் 9.02 மணி வரை. சுபநேரம்: பகல் 11.54 மணி முதல் 1.24 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி. ஆனி மாத தேய்பிறை தசமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: ரேவதி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்**: யோசனையான நாள். பணவரவு குறையும். குடும்பச்செலவு அதிகரிப்பால் கடன் படநேரும். தொழிலில் அரும்பாடுபட வேண்டியிருக்கும். தேக சுகம் பாதிப்படையும்.

**ரிஷபம்**: உயர்வான நாள். வருமானம் உயர் வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியாபாரம் மேன்மை அடையும். உத்தியோகத்தில் உயர்வுகளுடன், அந்தஸ்தும் கிடைக்கும்.

**மிதுனம்**: சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். தொழிலில் கடின உழைப்பும், அலைச்சலும் அதிகரிக்கும்.

**கடகம்**: ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் வளமாக இருக்கும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தர்களுக்கு கடின உழைப்புக்கு ஏற்ப வருமானம் உயரும்.

**சிம்மம்**: சலனம் மிகுந்த நாள். மனச்சஞ்சலம், கவலை உண்டாகும். பிள்ளைகளால் கவலை ஏற்படும். சகோதரர் ஒருவரின் உடல் நலக் குறைவால் அதிகம் யோசிக்க வேண்டி வரும்.

**கன்னி**: மத்திமமான நாள். பொருளாதாரம் மத்தமமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் தடைகள் உண்டாகும். தேவையற்ற செலவுகளால் மனக்கஷ்டம் உண்டாகும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்**: யோகமான நாள். குடும்பத்தில் அன்னியோன்னியம் அதிகரிக்கும். வீடு, வாகன வசதிகள் உண்டாகும். புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

**விருச்சிகம்**: இன்பமான நாள். இல்லத்தில் மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும். வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும். பெண்கள் மனம் விரும்பியபடி வாழ்க்கை அமையும்.

**தனுசு**: மத்திமமான பலன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வியாபாரம் மத்திமமாக நடக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**மகரம்**: சமபலன்கள் காணப்படுகின்றன. புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடுவது நல்லது. கோபமாய்ப் பிரிந்த உறவுகள் மீண்டும் வருவார்கள். உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் தாமதமாகும்.

**கும்பம்**: உயர்வான நாள். பொருளாதாரம் பெருகும். வியாபாரம் பன்மடங்கு பெருகும். உயரிய அந்தஸ்தும் கிடைக்கும்.

**மீனம்**: எழுச்சியான வாரம். பணபலம், மனபலம் அதிகரிக்கும். தொழிலில் உற்சாகத்துடன் ஈடுபாடு கொள்வார்கள்.

சந்திராட்டமநாள்: மகம், பூரம், உத்தரம், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

# இலங்கைக்கான கட்டார் தூதுவர் வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 19

இலங்கைக்கான கட்டார் தூதுவர் கலாநிதி ராஷித் ஷபீ அல்மர்ரீ அண்மையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவைச் சந்தித்து இருதரப்பு நல்லுறவுகள் சார்ந்த விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடினார்.

வளைகுடாவில் நிலவுகின்ற இராஜதந்திர நெருக்கடி எந்த வகையிலும் இரு தரப்பு உறவுகளையோ பொருளாதார நெருக்கடிகளையோ ஏற்படுத்த வாய்ப்பில்லை என்றும், கட்டார் தேச மக்களுக்கோ அங்கு தொழில் புரிபவர்களுக்கோ எந்த வகையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்த கட்டார் அரசு அனுமதிக்க மாட்டாது என்றும், கொழும்பிலுள்ள கட்டார் தூதரகம் அறிக்கையொன்றின் மூலம் இலங்கை வாழ் மக்களை அறிவுறுத்தி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சர்வதேச சட்டங்கள் மற்றும் மனித உரிமை நியமங்களை மீறி ஒரு சில அண்டை நாடுகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் சர்வதேச அளவில் வரவேற்பைப் பெறாத நிலையில் கட்டாருடனான வழமையான உறவுகளை உலக நாடுகள் வலுப்படுத்தி வருகின்றமையும் கூடிய விரைவில் நெருக்கடி நிலைமைகள் முடிவுக்குக் கொண்டுவரப்படுவதற்கான சாதகமான சமிக்ஞைகளைத் தருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

### திருஞானசம்பந்தர் குருபூசை தின

# திருமுறை மனனப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் விவரம்

வண்ணை, சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்திய திருஞானசம்பந்தர் குருபூசை தின திருமுறை, மனனப்போட்டியில் பரிசுபெற்றோர் விவரம் வருமாறு:-

பாலர் பிரிவு - தரம் - 1

1 ஆம் இடம் ப.டிதுசன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), 2 ஆம் இடம் பி.கேதுசன் (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்), 3 ஆம் இடம் ஜெ.தனவர்ஷினி (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி).

பாலர் பிரிவு - தரம் - 2

1 ஆம் இடம் யோ.அக்ஷனன் (சுன்னாகம் கதிரமலை சிவன் அறநெறிப்பாடசாலை), 2 ஆம் இடம் ஜெ.அபிஷிகா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), 3 ஆம் இடம் பி.தர்ஷன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி).

கீழ் பிரிவு - தரம் - 3

1 ஆம் இடம் வி.சிறிகலா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), 2 ஆம் இடம் ஹி.தருண் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), 3 ஆம் இடம் ர.உஷாந்தன் (உரும்பிராய் கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை).

கீழ் பிரிவு - தரம் - 4

1 ஆம் இடம் வி.சுஜிதா, 2 ஆம் இடம் ர. விதுசன் (கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை), 3 ஆம் இடம் சி.நவநிதி (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்).

சிறப்புப் பரிசு பெறுவோர்

தி.வைஷ்ணவி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), உ.மதன் (கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை), கு.யுகானா (சுன்னாகம் கதிரமலை சிவன் அறநெறிப் பாடசாலை), அ.ஆதித்யா (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்), ம.அபிராமி (தலையாழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை).

திருஞானசம்பந்தர் குருபூசை தினமான கடந்த 10 ஆம் திகதி பரிசளிப்பு விழா நடைபெற்றது. நிகழ்வுக்கு ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி கலாவதி பிரஹதீஸ்வர சர்மா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார். (இ)

# வடக்கு முதல்வர் விடயத்தில் ஆளுநரைப் பாராட்டுகிறார் பஸில் ராஜபக்ஷ

## அவர் சரியாகச் செயற்படுகின்றாராம்



கொழும்பு, ஜூன் 19

வடக்கு மாகாணத்தில் தற்போது எழுந்துள்ள பிரச்சினையை ஆளுநர் ரெஜினோல்ட்குரே கையாளும் விதம் சரியானது என முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பாராட்டியுள்ளார்.

வடமாகாண சபையில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி நிலைமை தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கருத்துக் கூறுகையில்

கூட்டு எதிர்க்கட்சி சில மாதங்களுக்கு முன்னர் வடமத்திய மாகாண முதலமைச்சருக்கு எதிராகப் பெரும்பான்மை உறுப்பினர்களின் கையொப்பத்துடன் மனு ஒன்றை சமர்ப்பித்தது.

தற்போது வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த இரு சந்தர்ப்பங்களில், இரு மாகாண ஆளுநர்களும் இருவேறு விதமான அணுகு முறைகளைக் கையாண்டிருந்தனர்.

13 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டத்திற்கமைய 9 மாகாணங்களிலும் ஒரே சட்டமே செயற்பட வேண்டும். ஆனால், இந்த விடயத்தில் வடமத்திய மாகாண ஆளுநர் தவறு செய்துள்ளார்.

இதில் வடமாகாண ஆளுநர் மேற்கொண்ட முறையே சரியானதாகும் என்றார் பஸில் ராஜபக்ஷ. (ம)

காலைக்கதிர்
Kalaikkathir
திங்கட்கிழமை 19.06.2017



# எல்லாவற்றுக்கும் 'இவரே' பொறுப்பு! சாடுகிறார் சங்கரி

''யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான உயிரழிவுகளுக்கு காரணம் யார்?'' என்ற தலைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி ஊடக அறிக்கை ஒன்றை 17.06.2017 திகிதியிட்டு வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

பல தடவைகள் என்னால் எடுத்துக் கூறப்பட்டவை, சுட்டிக்காட்டப்பட்டவை எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும் பெருமளவில் ஊடகங்களால் வெளிக்கொணரப்படுவதில்லை. எதிர்காலத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கக்கூடிய பல்வேறு விடயங்கள் பற்றி முன்கூட்டியே சிந்திப்பவன் நான். பலன் எதனையும் எதிர்பாக்காமல் சரியென தோன்றுவதை தயங்காமல் வெளிக்காட்டுபவன்.

தமிழரசுக் கட்சி, ஒரு புனிதமான ஒருவரால் 1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது உருவாக்கப்படும் போது அதற்கான அவசியத் தேவையும் இருந்தது. ஆனால், நாட்டில் ஏற்பட்ட சில அசாதாரண சம்பவங்கள் நாட்டில் வாழ்கின்ற சகல தமிழ் மக்களையும், மலையக மக்கள் உட்பட, ஒரே குடையின் கீழ் இணைக்க வேண்டுமென்ற பேராசையோடு வாழ்ந்தவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கியூ.ஸி அவர்கள்.

உடனடியாக சாதிக்கக்கூடிய, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றை ஒன்றிணைப்பதில் வெற்றி கண்ட பின்பு காலப்போக்கில் மலையக மக்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவர கனவு கண்டு, அது நிறைவேறாமல் எம்மை விட்டுப் பிரிந்தவர் தந்தை செல்வநாயகம் அவர்களே.

### தமிழர் கூட்டணியில் எஸ்.ஜே.வி. ஈடுபாடு

அவர் உருவாக்கிய தமிழரசுக் கட்சியை அவருக்கே தோன்றிய நியாயமான காரணங்களால் முடக்கி வைத்துவிட்டு, 1972 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்து அதனை வளர்ப்பதிலேயே தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தினார்.

இறப்பதற்கு பல நாள்களுக்கு முன்பே தான் வகித்து வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் பதவியை, பெருந்தலைவர்கள் ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ்.தொண்டமான் ஆகியோருடன் பகிர்ந்து கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை, முக்கூட்டுத் தலைமையின் கீழ், கொண்டு வந்தார்.

பெரும் இலட்சியத்தோடு ஆரம்பித்த தமிழர் விடுதலைக் கூட்டணி நெறி தவறாமல் 32 ஆண்டுகள் பயணம் செய்து, துரதிஷ்டவசமாக 2004 ஆம் ஆண்டு தடம் புரண்டது. அதை மேற்கொண்டவர்கள். யாரென்பதை அடையாளம் கண்டு, அவர்கள் மக்களால் தண்டிக்கப்பட வேண்டியவர்களாவர்.

### ஒரே குடையின் கீழ் போட்டியிட முடிவு

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில், அன்றைய தமிழ் அமைப்புக்கள், முக்கிய பிரமுகர்கள், கல்விமான்கள், யாழ்ப்பாணம்-மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவர் சங்கங்களின் தலைவர்கள் ஆகியோரின் ஒரே ஆசை, சகல தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரே குடையின் கீழ், ஒரே கொள்கையுடன், ஒரே பொதுச் சின்னமாகிய 'உதய சூரியன்' சின்னத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட வேண்டும் என முடிவு எடுத்திருந்தனர்.



அ. மங்கையர்க்கரசி

ஆனால், கிளிநொச்சியில் உருவான சதித்திட்டத்திற்கமைய, முன்னிலையில் உள்ள இருவரை திருப்திப்படுத்துவதற்காக தமிழரசுக் கட்சியின் சின்னமாகிய 'வீடு' சின்னத்தில் போட்டியிட வேண்டுமென முட்டாள் தனமான தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஏப்ரல் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் பொதுத்தேர்தலின் பின் ஒவ்வொன்றாக இடம்பெற்ற அனர்த்தங்களுக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும். யுத்தம் தொடர்வதில் ஆரம்பித்து பல்லாயிரக்கணக்கான விடுதலைப்புலிகள் இயக்கத்தினர், அவர்களின் போராளிகள், பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள், பல்வேறு அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோரின் தியாகங்கள் யுத்தத்தை ஓர் முடிவுக்குக் கொண்டு வந்தது.

மேலும் அவர்களே பல்லாயிரக்கணக்கான காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும், கடத்தப்பட்டவர்களுக்கும் பொறுப்பேற்க வேண்டும். இறுதியாக வீரமிக்க ஓர் தலைவன் அவருடைய குடும்பத்தினர் ஆகியோரின் துன்பகரமான முடிவு விடுதலைப் புலிகளின் அழிவிலேயே முடிந்தது.

விடுதலைப்புலிகளின் தலைமை, ஏற்கனவே பொதுக்கொள்கை, பொதுச் சின்னம் ஆகிய சம்பந்தமாக முடிவாகக் கொண்டிருந்தபோதும் அவர்களுடன் கலந்தாலோசிக்காமல் முட்டாள்தனமாக எடுத்த மாறுபட்ட முடிவு துரதிஷ்டவசமானதாகும். ஒன்றிணைந்து, மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்து, போராடி, கண்ட கனவு நிறைவேறியிருந்தால் நாம் பின்வருவனவற்றை அடைந்திருக்கலாம்.

**மாகாண சபை இழுபறிக்கும் இவர்தான் சூத்திரதாரி!!**


சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரே குடையின் கீழ் பொதுக் கொள்கை, பொதுச்சின்னம் ஆகியவற்றின் கீழ் போட்டியிட்டு இருப்பார்கள். அனைத்து வேட்பாளர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வெற்றி பெற்று போர்நிறுத்த உடன்படிக்கை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும். அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே பேச்சு ஆரம்பிக்கப்பட்டு உடனடியாகவோ அல்லது குறுகிய காலத்துக்குள்ளேயோ உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். மரணத்தை தழுவிக் கொண்டவர்களும், பிரபாகரன் உட்பட அனைவரும் உயிருடன் இருந்திருப்பார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்கள் தாம் இழந்த கௌரவத்தை மீளப் பெற்றிருப்பார்கள்.

### எல்லாவற்றுக்கும் பொறுப்பு இவரே!

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் நடந்தேறிய மரணங்கள், அழிவுகள் அத்தனைக்கும் பொறுப்பானவர்கள் இருவர் என நான் குற்றஞ்சாட்டுகிறேன். 2004 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் சம்பந்தப்பட்ட அனைவரும், புலிகள் உட்பட முழுமையாக சம்மதித்து ஒரு கொள்கை, ஒரு சின்னமாகிய உதய சூரியன் சின்னம், சகல கட்சிகளும் ஒரேகுடையின்கீழ் கொண்டுவருவதற்கு தயாரான நிலையில் இருந்தனர்.


ஆனால் இருவரின் அடாவடித்தனத்துக்கு வேறு எதுவும் காரணமல்ல, இதற்கு ஒரே காரணம் அவர்களுடைய பதவி ஆசையே ஆகும். தமிழ் மக்களுடைய பொருளாதார அழிவும், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் அழிவையும் விலையாகக் கொடுத்தே அவர்கள் இன்றும் தமது பதவிகளை அனுபவித்து வருகின்றார்கள்.





அ.அமிர்தலிங்கம்

இவர்களில் ஒருவர் அ.அமிர்தலிங்கம் படுகொலை செய்யப்பட்ட பின் 2004 ஆம் ஆண்டு வரை எனது முயற்சியால் இரு தடவைகள் நாடாளுமன்றத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் நியமன நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவராவார். அத்துடன் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் இரு தடவைகள் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக நியமனம் பெற்று வெற்றியும் பெற்றவர்.



நாடாளுமன்றப் பதவியையும் அதனுடன் சேர்ந்த சலுகைகளையும் நான்கு தடவைகள் நன்றாக அனுபவித்துவிட்டு, மோசடி மூலம், தமிழரசுக் கட்சியை உருவாக்கியவர் இறந்து 28 ஆண்டுகளுக்குப் பிறகு, அதைச் செயலிழக்க வைத்து 32 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழரசுக் கட்சியை மீளப் புதுப்பித்ததை நியாயப்படுத்த எக்காரணத்தை கூறுவார்?

வேடிக்கை என்னவெனில் அவர் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டே வன்னிக்குச் சென்று தங்களின் கட்டளைக்கமைய தமிழரசுக் கட்சியை புனரமைப்புச் செய்தார் என அறியப்படுகிறது.

இந்தப் பிரமுகரின் நடவடிக்கைகள் அன்று தடுக்கப்பட்டிருந்தால் அவர் பொறுப்புடன் செயற்பட்டிருப்பார். அ.அமிர்தலிங்கம் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர் மட்டுமல்ல இறுதிவரை அதன் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றி வந்தார். திருமதி அமிர்தலிங்கம் அவர்கள் தனது அறிக்கையொன்றில் தமிழரசுக் கட்சியின் மீள்புனரமைப்பு எமது பெருந்தலைவர்களால் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியை அழிப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். அந்த அறிக்கையின் ஓர் பகுதி கீழே தரப்படுகிறது.

''விரும்பத்தகாத சக்திகள் எவையும் தமிழரசுக் கட்சியின் சின்னத்தையும் அதன் பெயரையும் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது என்ற ஒரே காரணத்துக்காகவே எனது கணவர் தமிழரசுக் கட்சியின் பதிவைப் பாதுகாத்து வைத்தார். தமிழரசுக் கட்சியை அவர் ஒருபோதும் புனரமைக்க எண்ணவில்லை.

அவரால் வளர்க்கப்பட்ட சிலர் தமிழரசுக் கட்சியின் பெயரைத் துஷ்பிரயோகம் செய்யவும், அதனைப் புனரமைக்க முயல்வது கவலைக்குரியது. இவர்கள் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையையே இவர்கள் முறியடித்திருக்கிறார்கள். ''

இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பயங்கரமான நிலைமைக்கு யார் குற்றவாளிகள் எனக் கண்டுபிடிக்க வேண்டியது மக்களின் கடமையாகும். 2004 ஆம் ஆண்டு தொடக்கம் அவரால் உருவாக்கப்பட்ட அழிவுகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் நான் உறுதியாக நம்புகின்றேன். இன்று வடமாகாண சபை விடயத்தில் தலையிடுவதற்கு முன்பு நூறு தடவைக்கு மேல் சிந்தித்திருப்பார். அவர் தனது அதிகாரத்தின் எல்லையை அறிந்திருக்க வேண்டும். ★



# ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...? 213

பொன்.வேணு கிருஷ்ணா

1991 இல் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டதற்குப் பிந்தைய கால் நூற்றாண்டுக்கும் அதிகமான காலத்தில், நேட்டோ சக்திகளால் தொடுக்கப்பட்ட ஏகாதிபத்தியப் போர்கள் பால்கன்கள் மற்றும் கிழக்கு ஐரோப்பா, மற்றும் மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா எங்கிலும் பரவியிருக்கின்றன.

மக்ரோன் இன்னும் சற்று வெளிப் படையாகப் பேச முடிந்திருக்குமாயின், நேட்டோ சக்திகளது பொறுப்பற்ற கொள்கைகள் உருவாக்கியிருக்கும் ஒரு நெருக்கடிக்கு, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பா எங்கிலுமான ஆளும் வர்க்கத்திடம் எந்த வகையான தீர்வும் இல்லாதிருக்கிறது என்று ஒப்புக் கொண்டிருப்பார். ட்ரம்ப், ஜேர்மனியையும் பிரான்ஸையும் வர்த்தகப்




போரைக் கொண்டு அச்சுறுத்துகின்ற நிலையில், முக்கிய ஐரோப்பியத் தலைநகரங்களுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் அதிகரித்துச் செல்லும் பதற்றங்களே கூட, நேட்டோ கூட்டணிக்குள்ளான பதற்றங்கள் ஒரு வெடிப்பான பரிமாணங்களை எடுத்துக் கொண்டிருக்கின்றன என்பதின் எச்சரிக்கையே ஆகும்.

1991 இல் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டதற்குப் பிந்தைய கால் நூற்றாண்டுக்கும் அதிகமான காலத்தில், நேட்டோ சக்திகளால் தொடுக்கப்பட்ட ஏகாதிபத்தியப் போர்கள் பால்கன்கள் மற்றும் கிழக்கு ஐரோப்பா, மற்றும் மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா எங்கிலும் பரவியிருக்கின்றன. மொத்தமாய் எடுத்துப் பார்த்தால், இந்தப் போர்கள் -ஆப்கானிஸ்தான், யூகோஸ்லேவியா, ஈராக், சிரியா, லிபியா ஆகியவை மீதான போர்கள் மற்றும் இவற்றைக் கடந்து நடந்தவை- மில்லியன் கணக்கான உயிர்களைக் காவு கொண்டிருப்பதோடு இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய மிகப் பெரும் அகதிகள் நெருக்கடியை உருவாக்கியிருக்கின்றன. இப்போது உலக முதலாளித்துவத்தின் அதிகரித்துவரும் சர்வதேச முரண்பாடுகள் சர்வதேச அளவில் தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் முன்பாக ஒரு புதிய உலகப் போரின் அபாயத்தை முன் நிறுத்துகின்றன.

உண்மையில், இந்த செய்தியாளர் சந்திப்பு, பிரெஞ்சுப் புரட்சிக்கு முந்தைய இறுதி நூற்றாண்டில் வரலாற்று ரீதியாய் அழியத் தலைவிதி கொண்டிருந்த ஒரு வரம்பிலா முடியாட்சியால் கட்டப்பட்டதான தங்கமுலாம் பூசப்பட்ட வேர்சாயின் அரங்கில் நடைபெற்றது என்ற உண்மை விசித்திரமான பொருத்தமுடையதாகும். அவர்களின் சொந்த கொள்கைகளால் விளைந்த பெருகிச் செல்லும் அபாயகரமான பின்விளைவுகளை எப்படிக் கையாளுவது என்பதற்கான எந்த



ஆலோசனையையும் கூடியிருந்த செய்தியாளர்கள் அல்லது அரசியல்வாதிகளில் எவராலும் வழங்கமுடியவில்லை.

மக்ரோனின் கொள்கை ஒரு பெரும் போர் ஏற்படாமல் தடுப்பது அல்ல, மாறாக அதற்குத் தயாரிப்பு செய்வதே ஆகும். கட்டாய இராணுவச் சேவையைக் கொண்டு வருவதற்கு பிரெஞ்சு இளைஞர்களில் பெருவாரியாய் மூன்றில் இரண்டு பங்கினர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

புடினும் மக்ரோனும் அணு ஆயுதங்கள் குறித்து என்ன விவாதித்துக் கொண்டார்கள் என்பது குறித்தோ, அல்லது நேட்டோ சக்திகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான மூலோபாய அணு ஆயுதப் போரின் தாக்கம் ஐரோப்பிய அல்லது உலக மக்கள் தொகையின் உயிர்வாழ்க்கை மீது என்னவாயிருக்கும் என்பது குறித்தோ எவரும் புடினிடமோ அல்லது மக்ரோனிடமோ கேள்வி எழுப்பவில்லை.

மக்ரோனின் கொள்கை ஒரு பெரும் போர் ஏற்படாமல் தடுப்பது அல்ல, மாறாக அதற்குத் தயாரிப்பு செய்வதே ஆகும். கட்டாய இராணுவச் சேவையைக் கொண்டுவருவதற்கு பிரெஞ்சு இளைஞர்களில் பெருவாரியாய் மூன்றில் இரண்டு பங்கினர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்பதைக் கருத்துக் கணிப்புகள் காட்டுகின்ற போதிலும், மக்ரோனோ இப்போது இளம் பெண்களுக்கும் நீடிக்கப்பட்டுள்ள, அனைவரும் இராணுவச் சேவைக்குத் திரும்புவதற்கும் அத்துடன் பிரான்ஸின் இராணுவ செலவினத்தில் பல பில்லியன் யூரோ அதிகரிப்புகளுக்கும் முன்மொழிந்துள்ளார்.

**அமெரிக்காவின் ரஷ்ய-விரோதக் கொள்கைகளில் இருந்து தூர நிற்கும் மக்ரோனின் நடவடிக்கைகளை பிரெஞ்சு ஊடகங்கள் பாராட்டுகின்றன.**

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி மக்ரோன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் நடத்திய மாநாட்டை பிரெஞ்சு ஊடகங்கள் பாராட்டின.

ரஷ்யாவை நோக்கி அமெ ரிக்கா பகிரங்க குரோதம் காட்டுகின்ற நிலையிலும் மக்ரோன் ரஷ்யாவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார் என்ற உண்மையை மறைப்பதற்கு செய்தித்தாள்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை என்ற விதத்தில் இந்தப் பாராட்டு கூடுதல் முக்கியத்துவமுடையதாக இருக்கிறது.

ரஷ்யாவை நோக்கி மக்ரோனின் சமிக்ஞைகளுக்கும், அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் எல்லாவற்றுக்கும் முதலில் ஜேர்மனிக்கும் இடையிலான பதற்றங்கள் பெருகி வருவதற்கும், இடையிலான நெருக்கமான தொடர்புகளை இந்தத் தலையங்கம் சுட்டிக்காட்டியது.

Le Monde தனது தலையங்கத்தில் எழுதியது, ''வேர்சைய் கோட்டையின் கலைவண்ணத்தில், பிரான்ஸ் ரஷ்யாவுடனான தனது உறவுகளில் ஒரு புதிய மேம்பட்ட பாதையைத் தொடங்க விரும்பியது. அது நல்லதொரு விடயம்.''

''வேர்சையில் விளாடிமிர் புடினுடனான சந்திப்பைப் போல, நேட்டோவில் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் துருக்கி ஜனாதிபதி ரிசெப் தையீப் எர்டோகன் உடனான சந்திப்பின் போதும், மக்ரோன் தான் அங்கு தொனியை உருவாக்கியளித்தவராய் இருந்தார்'' என்பதில் அது குதூகலித்தது.

ரஷ்யாவை நோக்கி மக்ரோனின் சமிக்ஞைகளுக்கும், அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் எல்லாவற்றுக்கும் முதலில் ஜேர்மனிக்கும் இடையிலான பதற்றங்கள் பெருகி வருவதற்கும், இடையிலான நெருக்கமான தொடர்புகளை இந்தத் தலையங்கம் சுட்டிக்காட்டியது.

'ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறியதற்குப் பின்னரும் அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தேர்வாகியிருப்பதன் பின்னரும், ஐரோப்பாவானது (continental Europe) அமெரிக்காவையோ இங்கிலாந்தையோ இனியும் நம்பியிருக்க முடியாது, தன் வருங்காலத்திற்கு அது தானே போராடியாக வேண்டும்' என்று அண்மையில் ஜேர்மன் சான்சிலர் அங்கேலா மேர்க் கெல் விடுத்த அறிக்கை யில் இந்த பதற்றங்கள் ஓர் உக்கிரமான வடிவத்தை எடுத்திருந்தன.




(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

### அத்தியாயம் - 1

## புதிய தரிசனங்கள்



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.


அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – அவுஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

08




எழுபதுகளில் நான் பாலசிங்கத்தைச் சந்தித்து நேசிக்கத் தொடங்கினேன். அப்போது, எனது வாழ்க்கை இத்தகைய திருப்பங்களைச் சந்திக்கும் என்று நான் நினைத்தே பார்க்கவில்லை. எனது சமூகக் கலாசார சூழலில் இருந்து முற்றிலும் முரண்பாடான சூழலைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்கின்றேன் என்ற அந்த ஒன்றே, எமது திருமணம் மறக்க முடியாதபடி ஒரு வித்தியாசமான திருமணமாக அமைந்தது. அது எப்படி இரண்டு வெவ்வேறு கலாசாரங்களில் இருந்து வரும் இரண்டுபேர் திருமணம் என்ற பொதுத் தளத்தில் சந்திக்கக்கூடுமாக இருக்கின்றது? அது வெறும் உடற்கவர்ச்சியாக இருந்திருக்க முடியாது. கவர்ச்சியேதான் என்றால் எமது அந்த உறவு அவ்வளவு ஆழமாகவும் - நெஞ்சார்ந்தமாகவும் - இருந்திருக்க முடியாது. அப்படி என்றால் எம்மைப் பிணைத்தது எது? இத்தகைய ஓர் அசாதாரண பாதையில் என்னை அவரோடு இட்டுச் சென்றது எது?

பல ஆண்டுகளுக்கு முன்னதாக நான் மணம் புரிந்த பாலசிங்கம் இப்போதும் சாராம்சத்தில் அதே மனிதராகவே இருக்கின்றார். ஆனால், காலமும் சூழலும் அவரை இன்றைய நிலையிலுள்ள சிந்தனையாளராகவும், ஆளுமையாளராகவும் ஆக்கியிருக்கின்றன. கால் நூற்றாண்டுக்கு முன் நான் மணம் புரிந்த மனிதரை ஓர் ஆன்மீகவாதி என்றுதான் கூறுவேன். ஆன்மீகவாதி என்று கூறும்போது நிறுவனமாகிவிட்ட சமயங்களையும், நிலைபெற்ற சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் கடைப்பிடிப்பவராக நான் அவரைக் குறிப்பிடவில்லை. மாறாக, நேர்மை, நற்சீலம், மனிதநேயம் ஆகியவை பொதிந்த மனிதராக அவர் இருந்தார் என்றே கூறுவேன்.

நாம் முதலில் சந்தித்தபோது பாலாவுக்கு வயது 36. அப்போது கீழைத்தேய தத்துவ சிந்தனைகளை, குறிப்பாக இந்திய வேதாந்த தத்துவங்களை அவர் நிறையவே படித்திருந்தார். புத்தரின் போதனைகளில் அவருக்குத் தனியான நாட்டம் இருந்தது. உண்மையில் இளவயதிலேயே பௌத்த தத்துவம் அவரை வெகுவாகக் கவர்ந்ததால் இலங்கையின் பௌத்த கல்விமான்களைத் தரிசித்து விளக்கங்களையும் தத்துவத் தெளிவையும் பெற்றிருக்கின்றார். பொது மேடைகளில் பௌத்த உரைகளைக்கூட நிகழ்த்தியிருக்கின்றார். உண்மையான பௌத்த தத்துவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தமையால் சிறிலங்காவில் நிலவிய பௌத்தத்தில் அவர் நம்பிக்கை இழந்தார். இனவாத மற்றும் குறுகிய தேசியவாதக் கோட்பாடுகளால் அது களங்கப்பட்டு விட்டதாக அவர் கருதினார். ஆயினும், தனிப்பட்ட முறையில் அவருக்கு ஏற்பட்ட பேரிழப்பே அவருக்குள் அளப்பரிய சிந்தனா சோதனையை ஏற்படுத்தியது. தம்மையும், தாம் தீவிரமாகக் கடைப்பிடித்த தத்துவங்களையும் தாமே தமக்குள் கேள்விக்குரியவை ஆக்கினார். அவருடைய முதல் மனைவி கடும் சிறுநீரக நோயால் பீடிக்கப்பட்டு உயிரைத் தக்க வைக்க வெளி இணைப்புக் குருதிச் சுத்திகரிப்பு இயந்திரத்தில் தங்கியிருக்க வேண்டிய அறுதிநிலை ஏற்பட்டபோது, தர்மம் பற்றியும், அறநெறி பற்றியும் பாலா கொண்டிருந்த நிலைப்பாடு சோதனைக்கு உள்ளாகியது. கடும் நோயால் பீடிக்கப்பட்டு, மரணத்தின் விளிம்பில் ஊசலாடிக் கொண்டிருந்த தமது அழகிய இளம் மனைவியைக் கண்காணித்துப் பராமரிக்கும் போது மனோரீதியாகவும், உணர்வுரீதியாகவும் அவருக்கு ஏற்பட்ட அழுத்தங்கள் மனிதம் பற்றியும், மானுட உலகம் பற்றியும் அவருடைய உள்ளார்ந்த தத்துவ சுயதேடலை மேலும் ஆழமாக்கியது. உடல் நோயின் விளைவாக மானிட சரீரத்தில ஏற்படும் சீரழிவும் மாற்றமும், அத்தோடு நித்தமும் மரணத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலையும் மானுட இருப்பின் அர்த்தம் பற்றி அவரை ஆழமாகச் சிந்திக்க வைத்தன. தனித்துவம் வாய்ந்த அனுபவங்களையும் அவர் பெற்றார். அவை தந்த சிந்தனைத் தெளிவு அவரை ஒரு மதியூகியாக்கின. யதார்த்த உலகிலே அவர் ஒரு பகுத்தறிவுவாதியாகக் காலூன்றவும் வழிகோலின.

ஒருபுறம் கடுமையான பொருளாதாரப் பிரச்சினை. மறுபுறம் மரணத்தின் பிடியில் சிக்கியிருக்கும் அவருடைய துணைவியின் மன உளைச்சலுக்கும், உடல் பராமரிப்புத் தேவைக்கும், ஈடு கொடுக்கும் பொறுப்பு. இவற்றுடன் போராடிய இந்தக் கட்டம், பாலாவின் வாழ்வில் ஒரு தார்மீகச் சவாலாக அமைந்த காலம்; அவருடைய ஆளுமையின் திண்மையே சோதனைக்கு உள்ளான காலம் இது. அவருடைய வாழ்க்கையின் இந்த அத்தியாயத்தில் அவர் முகம் கொடுத்த சமூக, பொருளாதார பிரச்சினைகள் அவருடைய சகிப்புத் தன்மையின் எல்லைக்கு, அவரை இழுத்துச் சென்றிருந்தன. தர்மம், நல்லறம் ஆகியவை, வெறும் நூல்களிலிருந்து அகழ்ந்து எடுக்கப்படும் வார்த்தைகள் அல்ல. அன்றி வலிந்து ஊட்டப்படுவனவும் அல்ல. மாறாக, அவை எமது உயிர் வாழ்வின் மூலாதாரமாக எழுபவை. எண்ணமும் செயலும் ஒத்திசைவு கண்ட திறனாற்றல் அவை என்பதை அவர் பட்டறிந்து, உணர்ந்து தேறினார். அவருடைய மனைவி, ஐந்து ஆண்டு காலம் உயிரைத் தக்க வைக்கும் வெளியிணைக் குருதிச் சுத்திகரிப்பு இயந்திரத்தில், கூடுதலான காலம் வீட்டிலேயே அழுந்திய பின், காலமானார். தாங்கொணா மனநெருக்குவாரத்துக்கு பாலா உள்ளான இந்தக் காலகட்டத்திலேதான், தமது ஆயுட் கண்டமும் இதுவே என்ற கொடுமை அவர் முகத்தில் உறைத்தது. நீரிழிவு நோய் பாலாவுக்கு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பின்னர், சுய தேடல்களின் விளைவாகவும், உள்ளார்ந்த புலன்களின் கூர்மைப்படுத்தப்பட்ட ஒரு பிரதிபலிப்பாகவும் முகிழ்ந்து, புடமிட்ட ஒரு புதுமைப் பிறவியாக அவர் தேறினார். இதன் விளைவாக ஆன்மீகர் என்று வர்ணிக்கக்கூடியவராக அவர் மாறினார். இத்தகைய ஓர் ஆன்மீகரையே எனது துணைவராகப் பெற வேண்டும் என்ற தேடலில் நான்



ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். ஆனாலும், நான் சந்தித்த அந்த மனிதரை, என் கணவராகிவிட்ட அந்த மனிதரை வெறும் வார்த்தைகளால் வர்ணிக்க விரும்பும் நான் அவரை ஓர் ''உண்மையான மனிதப் பிறவி'' என்பேன். நான் மணக்க இருப்பவரிடம் என்னென்ன குணாம்சங்கள் இருக்க வேண்டும் என்று காத்திருந்தேனோ, அவை எல்லாம் பாலாவிடம் பொதிந்து இருந்தன. முதிர்ச்சி, விவேகம் மனோபலம் இனி, இவற்றிலும் மேலாய் பரிவு. விவேகம் எனும் போது ஒரு புத்திஜீவியை நான் எதிர்பார்க்கவில்லை. மனோபலம் எனும் போது ஒரு பயில்வானாகவோ, சண்டியனாகவோ இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. நான் எதிர்பார்த்த சீலங்களோடு உள்ள அந்த அசாதாரண மனிதரைச் சந்திக்க நம்பிக்கையோடு காத்திருந்தேன். அவர் அடக்கமுள்ளவராக இருக்கவேண்டும் ஆனால், கோழையாக இருக்கக் கூடாது. சாதாரணமானவராக இருக்க வேண்டும் ஆனால், அவரில் ஆழம் இருக்க வேண்டும். உறுதியான கொள்கைப் பிடிப்பு இருக்க வேண்டும் ஆனால், மமதை இருக்கக் கூடாது. தயாள குணமும், பெருமையும் இருக்க வேண்டும் ஆனால், அகங்காரம் கூடாது. இனி சுயநலவாதியாகவோ, முன்யோசனை அற்றவராகவோ இருக்கக் கூடாது. இந்தப் புருஷலட்சணங்கள் பொருந்திய வரைத்தான் பல ஆண்டுகளுக்கு முன் சந்தித்தேன். அவரை முதலில் சந்தித்த ஓரிரு வாரங்களிலேயே பாலாதான் என்னுடையவர் என்பதைப் புரிந்து கொண்டேன். சாதாரண அன்றாட முறைகள் தொடர்பாக, இனி பணம் சேமிப்பது தொடர்பாக, சாதாரண ஆள்கள் பொதுவாகப் புரியும் காரியங்களில் அவர் அக்கறை இல்லாமல் இருந்தமைக்கு - அவருடைய ஆன்மீகப் பண்புகளே காரணமாக இருந்திருக்க வேண்டும். பொருளிய பாதுகாப்பு மட்டில் அவர் பற்று இல்லாமல் இருந்தமையால், கையில் காசு இல்லாக் கையறு நிலைக்கு, இயல்பாகவே நாம் தள்ளப்படவும் நேர்ந்தது. ஆனால், எம்மிடமிருந்த சொற்பப் பணத்தோடு பாலா எப்படியோ சமாளித்தார். இல்லை! நிலைமையைச் சமாளித்தோம் எனலாம். அன்றாடச் சமாளிப்பேதான். ஆனால், ஒருவரை ஒருவர் நேசித்த நிலையில் மகிழ்ச்சியோடு வாழ்ந்தோம்.

வாழ்வு, சத்தியம் ஆகியவை தமது மனதிலே தோற்றுவித்த கேள்விகளுக்கு விடைதேடும் முயற்சியில், மேற்குலக தத்துவ மரபுகள் பொதிந்த பெருந்தொகை நூல்களை பாலா படித்தார். அவருடைய ஆன்மீக ஈடுபாட்டைச் சமநிலைப்படுத்திய ஒரு முக்கிய செல்வாக்காக மாக்சியமும், நவமாக்சியமும் அமைந்தன. பாலா நன்கு கற்றுத் தேர்ந்த துறைகளே அவை. ஆனால், இவை தொடர்பாக பிரத்தியேகக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் அவர் கொண்டிருந்தார். தந்தக்கோபுர அறிவுஜீவிகளின் தத்துவங்களை அவர் நிராகரித்தார். அவ்வாறே, புரிந்துகொள்ள முடியாத பூடகமான கருத்துருவங்களையும் மனித ஆற்றல்களால் சாதிக்க இயலாத விடயங்கள் பற்றிக் கூறும் சிந்தனை வடிவங்களையும் அவர் நிராகரித்தார். மாறாக, தத்துவம் உலகை மாற்றியமைக்க வேண்டும் என்ற மாக்சிய தத்துவ சிந்தனைக்கீற்று, அவருக்குப் பிடித்திருந்தது.

தொடரும்...

காலைக்கதிர் Kalaikkathir






மகுடம் கலை இலக்கிய வட்டம் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நடத்தும் கலை நிகழ்வின் 28 ஆவது நிகழ்வாக முன்னாள் வட கிழக்கு மாகாண கலாசாரப் பணிப்பாளர் கலா பூஷணம் செ. எதிர்மன்னசிங்கத்தின் 'கிழக்கு மாகாண தமிழ் மக்களின் பண்பாட்டு பாரம்பரியம்' ஆய்வு நூலின் வெளியீடும் பவள விழாவும் அண்மையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் மட்டு. மாநகரசபை ஆணையாளர் வெ.தவராஜா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி வேல்முருகு விவேகானந்தராஜா முதன்மை அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் சி.மௌனகுரு, பேராசிரியர் மா. செல்வராசா, பேராசிரியர் செ.யோகராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.







மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் அமைக்கப்பட்ட அய்யன் திருவள்ளுவர் திருவுருவச்சிலை அண்மையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தமிழ் நாட்டில் உள்ள தொழிலதிபர் வி.ஜி.பி, உலகத் தமிழ்ச் சங்கத் தலைவர் வி.ஜி.சந்தோஷம் அவரின் நன்கொடையில் அமைக்கப்பட்ட இந்த திருவுருவச் சிலையை உலகத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் சந்தோஷம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் டீ.என்.வள்ளிநாயகம் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.







உலக யோகா தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகமும் கிறீன் பீல்ட் சனசமூக நிலையமும் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் குருசோ வீதியில் அமைந்துள்ள கிறீன் பீல்ட் மண்டபத்தில் உலக யோகா தின நிகழ்வை நடத்தியுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.பேராலய உதவிப் பங்குத்தந்தை, யாழ். நீரிழிவுக் கழகத் தலைவர் லயன் தி. மைக்கல், தமிழ்நாடு திருநெல்வேலி உலக சமுதாய சேவா சங்க மனவளக்கலை பேராசிரியர் எஸ். இந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர்.(எ)





தேசிய இந்து அறநெறிக் கல்வி விழிப்புணர்வுக் கொடி வாரம் தற்போது இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகின்றது. திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலக உத்தியோகத்தர் ம.செந்தூரன் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வருகை தந்து கொடிதினத்தை ஆரம்பித்து வைத்தார். அலுவலகக் கடமையில் இருந்த அதிபர் வீ.கருணலிங்கம், பிரதி அதிபர் ச.லலீசன், அலுவலக உத்தியோகத்தர்களான சி.மேகிலா, ம.சுபராகினி ஆகியோர் கொடிகளைப் பெற்றுக் கொண்டு ஆதரவு வழங்கினர்.







கொடிகாமம், கச்சாய் பாதாள வைரவர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் முதலாவது நாள் காட்சிகள் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றன.

## எல்பிட்டியவில் சூட்டுச் சம்பவம்; சந்தேகநபர் கைது!

எல்பிட்டியப் பிரதேசத்தில் 3 பேர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியமை மற்றும் தாக்குதல் நடத்தியமை தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

எல்பிட்டிய பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அந்த நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

எல்பிட்டிய - நுகேகொடைப் பிரதேசத்தில் காணிப் பிணக்கு ஒன்று காரணமாக நேற்று முன்தினம் மாலை 3 பேர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு மேலும் இருவர் மீது கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தினார் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர்கள் கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

# சமூகத்துக்கு பயன்படுகின்றபோதே முழுமை பெறுகிறது ஆளுமைப்பண்பு

## நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளர் சந்திரகுமார் கருத்து

கிளிநொச்சி, ஜூன் 19

ஒவ்வொருவரிடமும் காணப்படுகின்ற ஆளுமைப் பண்புகள், அதன் திறமைகள் என்பன சமூகத்துக்குப் பயன்படுகின்றபோதே அவை முழுமையடைகின்றன என்று சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி திருநகர் கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தில் நேற்று முன்தினம் ஆளுமை விருத்திக் கல்விச் செயலமர்வும் அதன் அறிமுக நிகழ்வும் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கல்வி வளர்ச்சியில் இலங்கையிலேயே கிளிநொச்சி மாவட்டம் கடைசி நிலையில் உள்ளமை துரதிஷ்டவசமானது. பின்னோக்கிச் செல்லும் கல்வியை மேம்படுத்த வேண்டும். இந்த மாவட்டத்தின் கல்வி நிலை கீழ்மட்டத்தை நோக்கிச் செல்வதை காப்பாற்ற வேண்டும் என்கின்ற ஆர்வம் கல்வி சார்ந்த எல்லோருக்கும் உள்ளது.

ஆனால், அதனை எப்படி மாற்றியமைத்து முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்பது தொடர்பாக எங்களுக்குள் அதிக வேற்றுமைகள் காணப்படுகின்றன. அந்த வேற்றுமைகள் தான் தொடர்ந்தும் இந்த மாவட்டத்தின் கல்வியை மேம்படுத்த முடியாமைக்கு பிரதான காரணமாகக் காணப்படுகின்றது என்று நான் கருதுகின்றேன்.

கிராமப்புறங்களின் கல்வி நிலைமை மிகவும் மோசமாகக் காணப்படுகின்றது. ஆசிரிய வளப் பற்றாக்குறை இருக்கின்றது. மாகாணத்தின் பட்டியலில் கிளிநொச்சி மாவட்டத்துக்கு திருப்



திகரமான ஆசிரிய வளம் இருப்பதாகக் கூறப்படுகிறது. போர் பாதிப்புக்களின் பிரதிபலிப்பை சவாலாக எடுத்துக் கொண்டு நாம் முன்னேற வேண்டும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வெளியேறுகின்றனர். ஆனால், பல்கலைக்கழகம் எவ்வளவு தூரம் பட்டதாரிகளை ஆளுமை விருத்தி உள்ளவர்களாக உருவாக்கி விடுகின்றது என்பதில் பல விமர்சனங்கள் உள்ளன. -என்றார்.(எ-81)

# வெள்ளப்பெருக்கின் பெரும் பாதிப்புகளை துரிதகதியில் துடைத்தெறிய உதவுங்கள்!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்கிறார்

கொழும்பு, ஜூன் 19

வெள்ளப் பெருக்காலும் மற்றும் மண்சரிவாலும் பாதிக்கப்பட்ட மாணவர்கள், இந்த ஆண்டுக்குப் பதிலாக, அடுத்த வருடத்தில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட கருத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தி உள்ளார்.

வெள்ளப்பெருக்கின் தாக்கம் அதிகம் என்பதால், அவர்கள் மொத்தத்தில் மூன்று தடவைகள் பரீட்சைக்குத் தோற்ற ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அவர் சலுகை வழங்கி உள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் அண்ணளவாக 36 ஆயிரம் மாணவர்கள், வெள்ளப் பெருக்கால், தமது வசம் இருந்த சகல புத்தகங்களையும் முற்றாக இழந்து விட்டனர் என்றும் பிரதமர் தகவல் தெரிவித்தார்.

எனினும், மாணவர்கள் நான்கு தடவைகள் பரீட்சைக்குத் தோற்ற வகைசெய்ய வேண்டும் என்று கல்வி அதிகாரிகளும், பெற்றோரும் விடுத்த கோரிக்கையை ஏற்க அவர் மறுத்துவிட்டார்.

இதேவேளை, மாத்தறை மாவட்டத்தில், அண்ணளவாக 36 ஆயிரம் மாணவர்கள தமது புத்தகங்களையும் ஏனைய பயிற்சி உபகரணங்களையும் இழந்து வெறுங்கையோடு நாள்களைக் கடத்த வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அழிந்து போயுள்ள வீதிகளைத் திருத்தவும், புணரமைக்கவும் 400 கோடி ரூபா தேவை என்றும், 1,902 ஏக்கர் தேயிலைத் தோட்டங்கள் அடியோடு அழிந்து விட்டன என்றும் உத்தியோக பூர்வமாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

தேயிலைத் தோட்டங்களில் மீள் நடுகைக்கு பெரும் நிதி வளம் வேண்டும் என்றும்



பிரதமர் சுட்டிக்காட்டி உள்ளார். அதேவேளை, வேறு நாடு ஒன்றில் இத்தகைய பாதிப்பு ஏற்படும் பட்சத்தில், அந்த நாட்டு அரசு துரிதகதியில் செயற்பட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளும்.

அதனை, மனதில் வைத்து நாம் தாமதங்களைத் தவிர்த்து செயலாற்றுவது மிக அவசியம். - என்றும் பிரதமர் சுட்டிக் காட்டி உள்ளார். (அ)

## நாடு முழுவதும் திடீர் சோதனை; 3,214 பேர் கைது

நாடு முழுவதும் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட விசேட திடீர் சோதனை நடவடிக்கைகளின்போது பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 3 ஆயிரத்து 214 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, போக்குவரத்துச் சட்டங்களை மீறிய 3 ஆயிரத்து 647 பேருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட நடவடிக்கைக்கு நாடு முழுவதிலும் பொலிஸார் 11 ஆயிரத்து 558 பேர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (எ)

## மன்னாரில் முதன்முறையாக நடந்த உலக யோகா தின நிகழ்வு





மன்னாரில் முதன்முறையாக இவ்வாண்டு உலக யோகா தின நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற யோகா தின நிகழ்வுகளில், மன்னார் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் சுகந்தி செபஸ்தியன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், இந்தியத் துணைத் தூதுவர் ஆர்.நடராஜன், மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை, நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## நீர்ப்பாசனத்துறை செயற்றிட்டங்கள் ஊழியர் பற்றாக்குறையால் தாமதம்!



அதிகாரிகள், பொறியியலாளர்கள் உட்பட ஏனைய அத்தியாவசிய சேவைகளுக்கான ஊழியர் பற்றாக்குறை, நீர்ப்பாசன செயற்றிட்டங்களில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது.

நீர்ப்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கே பண்டார, அமைச்சு அதிகாரிகளுடனான நேற்றைய சந்திப்பின் போது இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்தநிலையில் சில மாவட்டங்களில் நீர்ப்பாசன செயற்றிட்டங்களில் தாமதம் ஏற்பட்டுள்ளது என நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக் காட்டினார்கள்.

இது தவிர, ஒப்பந்தகாரர்கள் பொருந்தாமை காரணமாக மீண்டும் மீண்டும் ஒப்பந்தக் கோரிக்கைகளை விடுக்க வேண்டிய நிலை உள்ளதால் இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது.

விரைவில் இவற்றுக்கான தீர்வு எட்டப்படும் என்று இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

# கட்சி எம்மிடம்; ஆட்சி பன்னீரிடம்!

## சசி குடும்பத்தினரின் புதிய திட்டம்; பழனிச்சாமி தடுமாற்றம்!

பன்னீர்செல்வத்துக்கு மக்கள் ஆதரவு உள்ளமையால், முதலமைச்சர் பதவியை அவருக்கு வழங்குவதற்கும், கட்சியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் சசிகலா குடும்பத்தினர் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அ.தி.மு.கவில் சசிகலா குடும்பத்தினர் கோலோச்சுவதைப் பா.ஜ.க. தலைவர்கள் விரும்பவில்லை. எனவே, சசிகலா குடும்பத்தை ஒதுக்கி விட்டு பன்னீர் அணியுடன் இணையும்படி முதல்வர் பழனிச்சாமி தரப்பினருக்கு அவர்கள் நெருக்கடி கொடுத்து வருகின்றனர்.

ஆனால், முதலமைச்சர் பதவியில் திடமாக அமர்ந்த பழனிச்சாமி, அதைத் துறக்கத் தயாராக இல்லை. இதன் காரணமாகவே பன்னீர் அணியுடனான இணைப்புத் தடைப்பட்டது. பன்னீர் அணியினர் முதலமைச்சர் மற்றும் பொதுச் செயலர் பதவியை எதிர்பார்த்தனர். அதை வழங்குவதற்கு முதலமைச்சர் பழனிச்சாமி தயாராக இல்லை. அவர் தனக்கென தனி ஆதரவு சட்டசபை உறுப்பினர்களைத் திரட்டிக் கொண்டு தனியாகச் செயற்படத் தொடங்கி உள்ளார். இது சசிகலாகுடும்பத்தினிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதே நிலை நீடித்தால், கட்சியும், ஆட்சியும், தங்கள் குடும்பத்தின் பிடியில் இருந்து சென்றுவிடும் என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

### ஆலோசனைக் கூட்டம்

இது தொடர்பாகக் கடந்த 12 ஆம் திகதி சென்னை பெசன்ட் நகரில் உள்ள சசிகலாவின் கணவர் நடராஜன் வீட்டில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இதில், தினகரன், திவாகரன், வெங்கடேஷ் மற்றும் உறவினர்கள் பங்கேற்றனர். தற்போதைய அரசியல் தொடர்பில் ஆலோசித்தனர். அப்போது, ''தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆட்சிக்கு வருகின்றமையைப் , பா.ஜ.க. விரும்பவில்லை. அதை மீறி வந்தால், அடுத்தடுத்து வழக்குத் தொடர்ந்து, சிக்கலை ஏற்படுத்துவர். எனவே, ஆட்சிக்கு ஆசைப்படாமல் கட்சியை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம்.'' என ஆலோசித்துள்ளனர்.

இதை அடுத்து, ஈக்காட்டுதாங்கலில் பன்னீர்செல்வத்தை அழைத்து, திவாகரன் இரு முறை பேச்சு நடத்தி உள்ளார். அதன்பின், சசிகலா குடும்பத்தினர் தங்கள் முடிவை பழனிச்சாமியிடம் தெரிவித்துள்ளனர்.

''பன்னீர்செல்வத்தைச் சேர்த்துக் கொள்வதில் ஆட்சேபனை இல்லை. முதலமைச்சர்பதவியை விட்டு விலகமாட்டேன். தற்போது, மத்திய அரசு எனக்கு ஆதரவு அளிக்கிறது'' எனக்கூறி முதலமைச்சர் பழனிச்சாமி பதவியைத் துறக்கத் திட்டவட்டமாக மறுத்து விட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், அடுத்து என்ன செய்வது என சசிகலா குடும்பத்தினர் ஆலோசித்து வருகின்றனர். இது தொடர்பாகச் சிறைக்குச் சென்று சசிகலாவைச் சந்தித்துப் பேசி உள்ளனர். மேலும், தினகரன் ஆதரவு, உறுப்பினர்கள் முதலமைச்சர் பழனிச்சாமியை சந்தித்து, இது பற்றி நெருக்கடி கொடுத்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக அ.தி.மு.கவில் அடுத்தடுத்து திருப்பங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

## 'ஜெ'இன் சிகிச்சை செலவை வழங்கியது அ.தி.மு.க.!



ஜெயலலிதாவின் மருத்துவச் சிகிச்சைக்கு செலவான 6 கோடி ரூபாவை அப்பலோ மருத்துவமனை நிர்வாகத்திடம் அ.தி.மு.க. வழங்கியுள்ளது.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா திடீர் உடல் நலக் குறைவால் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி இரவு 10.30 மணி அளவில் சென்னை கிரீம்ஸ் சாலையில் அமைந்துள்ள அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

லண்டன் வைத்தியர் ரிச்சர்ட் பீலே 5 முறையும், எய்ம்ஸ் மருத்துவக் குழுவினர் 3 முறையும் சென்னை வந்து முதல்வருக்கு சிகிச்சை அளித்தனர். இந்த நிலையில், டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி நள்ளிரவு 11.30 மணி அளவில் ஜெயலலிதா உயிரிழந்தார்.

இந்த நிலையில், ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைக்கு அரச மருத்துவர் பி. பாலாஜி, 5 கோடி ரூபா முதல் 5.50 கோடி ரூபா வரை செலவாகியுள்ளது.- எனத் தெரிவித்தார். இதையடுத்து, ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைக்கான கட்டணத்தை அரசு செலுத்துவதா அல்லது கட்சி செலுத்துவதா என்ற பெரும் குழப்பம் நீடித்து வந்தது.

இந்த நிலையில், ஜெயலலிதாவின் சிகிச்சைக் கான செலவை கட்சி சார்பில் கொடுப்பது என முடிவு செய்யப்பட்டது. அதன்படி, காசோலையை அப்பலோ மருத்துவமனை நிர்வாகத்தினரிடம் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கினார். (ச)

## ஏற்றுமையாகச் செயற்படுங்கள்; குடும்பத்தினருக்கு சசி கடிதம்!

டி.டி.வி. தினகரனுக்கு எதிராக ஆதரவைத் திரட்ட முயன்ற திவாகரனுக்கு, சசிகலா கடிதம் எழுதியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

டில்லி திகார் சிறையிலிருந்து வெளியே வந்த டி.டி.வி. தினகரன், கட்சிப் பணிகளைத் தொடர்ந்து செய்வேன் என அறிவித்தார். இதனை அடுத்து, அ.தி.மு.க.சட்டசபை உறுப்பினர்கள் 32 பேர் தங்களது ஆதரவைத் தினகரனுக்குத் தெரிவித்தனர்.

இதனால் , அ.தி.மு.க. எடப்பாடி அணி, பன்னீர் அணி மற்றும் டி.டி.வி. தினகரன் அணி என மூன்றாகப் பிளவுபட்டது. இதற்கிடையே, தினகரனுக்கு ஆதரவு தர வேண்டாம் என திவாகரன் புதிய அணியைத் திரட்டினார்.

இவ்வாறு சசிகலா குடும்பத்துக்குள்ளேயே அதிகாரப் போட்டி எழுந்தது. இந்த நிலையில், சிறையில் உள்ள சசிகலா தனது கைப்படக் கடிதம் எழுதி உள்ளாராம்.



''என்னதான் நடக்கிறது. நமக்குள் சண்டை வேண்டாம். நாம் சண்டை போட்டால் பா.ஜ.கவுக்கும், எடப்பாடிக்கும் தான் லாபம். எனவே, சண்டைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள். ஒற்றுமையாகச் செயற்படுங்கள்'' என்று கேட்டுக் கொண்டாராம் சசிகலா. (ச)

இந்தியாவில் முதல்முறையாக

## கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை: சென்னை வைத்தியர்கள் சாதனை!




சென்னை மியாட் மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு குணமடைந்த வெளிநாட்டு குழந்தைகளுடன், மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், குழந்தைகளின் பெற்றோர், மருத்துவக் குழுவினர் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

இந்தியாவில் முதல் முறையாக 6 மாதக் குழந்தைக்கு கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை செய்து சென்னை மியாட் மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடான தான்சானியாவின் ஜன்ஜிபார் பகுதியைச் சேர்ந்த 6 மாதக் குழந்தை அமீத். இந்தக் குழந்தைக்குப் பிறவிலேயே பித்தக் குழாய்கள் இருக்கவில்லை. 4 ஆவது மாதத்தில் கல்லீரல் பாதிக்கப்பட்டது. இதனால், குழந்தையின் உடல் கவலைக்கிடமானது.

இந்த நிலையில், சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில், மேற்படி குழந்தையை கடந்த மாதம் சேர்த்தனர். மருத்துவர்கள் பல்வேறு பரிசோதனைகளை செய்து, பார்த்து விட்டு, குழந்தைக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யத் திட்டமிட்டனர். குழந்தையின் தாய் தனது கல்லீரலைத் தானமாகக் கொடுக்க முன்வந்தார்.

இதையடுத்து, தாயிடம் இருந்து பெறப்பட்ட கல்லீரலை அறுவை சிகிச்சை மூலம் குழந்தைக்கு வெற்றிகரமாகப் பொருத்தி ரத்தக் குழாய்கள், பித்தக் குழாய்களை முறையாக இணைத்தனர். கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு குழந்தை, தாய் இருவரும் நலமாக உள்ளனர்.

இதேவேளை, செஷல்ஸ் நாட்டைச் சேர்ந்த 2 வயது குழந்தை கிரேஸ். இந்தக் குழந்தைக்கும் பிறவியிலேயே பித்தக் குழாய் இல்லை. இந்தக் குழந்தைக்கும் கல்லீரல் பாதிக்கப்பட்டமையால், மியாட் மருத்துவமனையில் சேர்த்தனர். தாயிடம் இருந்து ஒரு பகுதி கல்லீரல் எடுக்கப்பட்டு, அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தைக்குப் பொருத்தப்பட்டது. இந்தக் குழந்தையும், தாயும் தற்போது நலமாக உள்ளனர். இந்த 2 குழந்தைகளின் கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சைக்கான செலவுகளையும் அந்தந்த நாட்டு அரசுகளே ஏற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கேரளாவில் டெங்கால் ஒரே நாளில் 10 பேர் சாவு!

கேரளாவின் பல்வேறு பகுதிகளில் டெங்குக் காய்ச்சலால் கடந்த வெள்ளிக்கிழமை மாத்திரம் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என கேரள சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

டெங்குக் காய்ச்சல் காரணமாக அதிகமான பொதுமக்கள் உயிரிழந்து வருகின்றனர். இது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

டெங்குக் காய்ச்சலைத் தடுக்கும் நோக்கில் மாநிலம் முழுவதும் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இருந்த போதிலும் திருவனந்தபுரம் மற்றும் பத்தினம்திட்டா மாவட்டங்களில் டெங்கு நோய்ப் பாதிப்பு அதிகமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# போர்த்துக்கலில் காட்டுத் தீ: 57 பேர் சாவு: 20 பேர் காயம்!

லிஸ்பன், ஜூன் 19

போர்த்துகல் நாட்டின் மத்திய பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி 57 பேர் உயிரிழந்தனர். 20 பேர் படுகாயமடைந்தனர். உயிழந்தோரின் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பா கண்டத்தின் தென்பகுதியில் உள்ள போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் நகரில் இருந்து சுமார் 200 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தென்கிழக்கு வனப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திடீரென்று காட்டுத் தீ பரவியது.





மளமளவென பரவிய தீ , காட்டில் இருந்த மரங்களை பதம் பார்த்தது. காட்டின் ஓரமாக செல்லும் வீதியோரம் இருந்த மரங்களிலும் தீ பற்றியது. இதனால் அந்த வீதி வழியாக வாகனங்களில் சென்றவர்கள் முன்பக்கமோ, பின்பக்கமோ செல்ல முடியாமல் வீதியின் நடுவில் சிக்கிக் கொண்டனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயை அணைக்க முயற்சித்தனர். எனினும், வீதியில் நின்றிருந்த வாகனங்கள் தீயில் எரிந்து நாசமாகின.

அதில் பயணித்தவர்கள் உடல் கருகி உயிரிழந்தனர். பலர் தீக்காயங்களுடன் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போர்த்துக்கல் நாட்டில் கடுமையான அனல்காற்று வீசிவருகிறது. இந்த நிலையில், இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இங்கு சம்பவ தினத்தன்று வெப்ப நிலை 40 டிகிரி செல்சியஸ் அளவுக்கு உயர்ந்தது.

இந்தக் காட்டுத் தீ எவ்வாறு தோன்றியது என்பது தொடர்பில் இதுவரை எதுவும் தெரியவரவில்லை.

''துரதிஷ்டவசமாக சமீபத்தில் நிகழ்ந்துள்ள காட்டுத் தீ சம்பவங்களில் அதிக சோகத்தை ஏற்படுத்திய சம்பவமாக இது உள்ளது''- என்று போர்த்துக்கல் பிரதமர் ஆன்டனியோ கோஸ்டா தெரிவித்திருக்கிறார்.

தீயை அணைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என அர்ச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச)



அமெ.போர்க் கப்பல் — சரக்கு கப்பல் விபத்து:

## மாயமான வீரர்களின் சடலங்கள் நேற்று மீட்பு!

டோக்கியோ, ஜூன் 19

ஜப்பான் கடற் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சரக்கு கப்பல் ஒன்றுடன் அமெரிக்க போர்க் கப்பல் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், காணாமற்போன கடற்படை வீரர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில். ஏழு கடற்படை வீரர்கள் காணாமல் போயிருந்தனர். கடற்படைத் தளபதி உட்பட மூவர் காயமடைந்தனர்.

ஜப்பான் கடல் பகுதியில் அமெரிக்காவின் 'பிட்ஸ் ஜெரால்ட்'என்ற நாசகாரி போர்க்கப்பல் சென்று கொண்டிருந்தது. அது மிகவும் அதிநவீன தொழில் நுட்ப வசதி கொண்டது.

இதில் அதிக சக்தி வாய்ந்த ரேடார் கருவிகள் உள்ளன.

இது யோகோசுகா பகுதியில் தென் மேற்கில் 56 கடல் மைல் தொலைவில் வந்த போது, எதிரே வந்த ஏ.சி.எஸ். கிரில்டல் என்ற சரக்கு கப்பலுடன் மோதியது. இதில் 30ஆயிரம் தொன் சரக்கு ஏற்றப்பட்டிருந்தது.

இந்தச் சரக்குக் கப்பல் அதிக நிறையுடன் இருந்த காரணத்தாலேயே, அமெரிக்கபோர்க் கப்பல் கடும் சேதம் அடைந்தது.

இந்த நிலையில், மாயமாகியிருந்த வீரர்களின் சடலங்கள் விபத்துக்குள்ளான ஜப்பான் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட கடற்படை வீரர்களின் உடல்கள்கடற்படை மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## கியூபாவுடனான ஒப்பந்தங்களை ரத்து செய்தார் அமெ.ஜனாதிபதி!

வொஷிங்டன், ஜூன் 19

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனக்கு முன்னால் பதவியிலிருந்த பராக் ஒபாமா, கியூபாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் ரத்துச் செய்கிறேன் என அறிவித்துள்ளார்.

அத்துடன், கியூபாவுக்கு பயணிக்கும் அமெரிக்கர்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் நிறைவேற்று ஆணையிலும் கைச்சாத்திட்டுள்ளார்.

இதனால், மீண்டும் பனிப்போர் காலமோதல் போக்கை உருவாக்கக் கூடிய செயல்பாடுகளில் அவர் ஈடுபடக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

இது தொடர்பில் ட்ரம்ப் தெரிவிக்கையில்-

எமது முன்னைய அரசு வன்முறையைப் பரப்புகின்ற ஒரு அரசுடன் உடன்படிக்கை செய்து

மீண்டும் பனிப்போர் மோதல்?

கொண்டது.

ஆகையால் உடனடியாக செயற்படுத்தப்படும் வகையில் கியூபாவுடனான ஒருதலைப்பட்ச ஒப்பந்தங்களைக ரத்துச் செய்கின்றேன். தேர்தல் பிரசாரத்தில் வாக்குறுதி அளித்தபடி புதிய கொள்கையை அறிவிக்கிறேன்.

அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலை, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தேர்தலை நடத்துதல் மற்றும் கருத்துச் சுதந்திரம் போன்ற விடயங்கள் கியூபாவில் இடம் பெறும்வரை கியூபா மீதான பொருளாதார தடைகளை நாம் நீக்கமாட்டோம்.-



என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இதற்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டுள்ளார் .

ட்ரம்பின் இந்தச் செயலை கியூபா விமர்சித்துள்ளது. எனினும் மரியாதைக்குரிய அளவில் அமெரிக்காவுடன் பேச்சு நடத்த விரும்புகிறேம் என கியூபா கூறியுள்ளது. கம்யூனிச நாடான கியூபாவில் அரசியல் கட்சிகளுக்கு அனுமதியில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தல்: நேற்று 2ஆம் சுற்று வாக்குப் பதிவு!

பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தல் 2 ஆம் சுற்று வாக்குப்பதிவு நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. இதில் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் கட்சிக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. அதில் இமானுவேல் மக்ரோன் வெற்றி பெற்று ஜனாதிபதி ஆனார். இதனை அடுத்து, கடந்த 11 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. அந்த வாக்குப்பதிவில் பெரும்பான்மையான இடங்களில் ஜனாதிபதி மக்ரோனின் செஞ்சுறிஸ்ட் கட்சி வெற்றி பெற்றது.

பிரான்ஸைப் பொறுத்த வரை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் 50 சதவீத வாக்குகளைப் பெற வேண்டும். இதற்காக 2 கட்டமாகத் தேர்தல் நடைபெறும். முதல் கட்டத் தேர்தலில் 50 சதவீத வாக்குக் கிடைக்காவிடின் குறைந்த வாக்குகளைப் பெற்றவர்கள் நீக்கப்பட்டு முன்னணியில் இருப்பவர்கள் மீண்டும் போட்டியிடுவார்கள். அவர்களில்



80 சதவீதம் வாக்குகள் பெறுபவர்கள் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவர்.

முதல் சுற்று தேர்தலை வைத்து எத்தனை பேர் வெற்றி பெற்றுள்ளனர் எனக் கணிக்க முடியாது. எனவே 2ஆவது சுற்றுத் தேர்தல் நடந்தது. அதில் ஏற்கனவே நடந்த தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்றவர்கள் மட்டும் போட்டியிட்டனர்.

இந்தச் சுற்றுத் தேர்தலிலும் மக்ரோனின் செஞ்சுறிஸ்ட் கட்சி இன்னும் கூடுதல் இடங்களில் வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளது. எனவே மொத்தம் உள்ள 577 தொகுதிகளில் 390 இல் இருந்து 430 இடங்கள் வரை ஜனாதிபதி மக்ரோனின் கட்சி கைப்பற்றும் வாய்ப்பு உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)



## உலக ஹொக்கி லீக் அரை இறுதிச் சுற்று: இந்திய அணிக்கு 2 ஆவது வெற்றி



உலக ஹொக்கி லீக் அரை இறுதிச் சுற்றுப் போட்டியில் இந்திய அணி 3-0 என்ற கோல் கணக்கில் கனடாவைத் தோற்கடித்து 2ஆவது வெற்றியை ருசித்தது.

உலக ஹொக்கி லீக் அரை இறுதி சுற்றுப் போட்டி லண்டனில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 10 அணிகள் 2 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக் ஆட்டங்களில் மோதி வருகின்றன.

இதில் நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் இந்தியா-கனடா அணிகள் மோதின. தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி 3-0 என்ற கோல் கணக்கில் கனடாவைத் தோற்கடித்து இரண்டாவது வெற்றியை ருசித்தது.

இந்திய அணியில் சுனில் 5ஆவது நிமிடத்திலும், ஆகாஷ்தீப் சிங் 10ஆவது நிமிடத்திலும், சர்தார்சிங் 18 ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர்.

இதற்கு முந்தைய ஆட்டத்தில் இந்திய அணி ஸ்கொட்லாந்தை வென்று இருந்தது.

நேற்று நடைபெறவிருந்த லீக் ஆட்டத்தில் இந்திய அணி, பாகிஸ்தானை எதிர்கொள்ள விருந்தது.

## இந்தியா – பாகிஸ்தான் நேரடிக் கிரிக்கெட் தொடர் நடக்கவே நடக்காது!





ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தேசியத் தலைவர் அமித் ஷா உறுதி

இந்தியா - பாகிஸ்தான் இடையே நேரடி கிரிக்கெட் தொடர் கிடையாது என்று இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய தலைவர் அமித் ஷா கூறியுள்ளார்.

இந்திய - பாகிஸ்தான் எல்லைக்கோடு அருகே போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் இராணும் இந்திய எல்லைக்குள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறது. மேலும், தீவிரவாதிகள் ஊடுருவலுக்கு துணை புரிகிறது என்ற குற்றச்சாட்டும் இருந்து வருகிறது.

எனவே, எல்லை கடந்த தீவிர வாதத் தாக்குதல் நிறுத்தப்படும் வரை இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நேரடி கிரிக்கெட் தொடர் நடைபெறாது என இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முடிவு எடுத்துள்ளது.

இதற்கிடையே; இரு அணிகளுக்கு இடையிலான போட்டி நடைபெற வேண்டுமென்றால் மத்திய அரசின்முடிவை பெறுவது கட்டாயம் என்றும்கூறப்பட்டது.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மத்திய அரசிடம் பலமுறை இதற்கான அனுமதி கேட்டது. ஆனால், மத்திய அரசு திட்டவட்டமாக அதை நிராகரித்து விட்டது.

இந்நிலையில் பா.ஜக.வின் தேசிய தலைவரான அமித் ஷாவிடம், இந்தியா - பாகிஸ்தான் இடையே நேரடி கிரிக்கெட் தொடர் மீண்டும் தொடங்கி நடைபெறுமா? என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அமித் ஷா பதலளிக்கையில்-

''சர்வதேச தொடர்களில் இந்தியா, பாகிஸ்தானை எதிர்த்து விளையாடும். ஆனால், இந்தியா பாகிஸ்தான் மண்ணிலோ, பாகிஸ்தான் இந்திய மண்ணிலோ விளையாடாது''- என்றார்.

இதன்மூலம் இரு அணிகளுக்கும் இடையிலான நேரடி கிரிக்கெட் தொடருக்கு வாய்ப்பில்லை என்பது தெளிவாகியுள்ளது.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சரும் இதே கருத்தை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

### இந்தியப் பயிற்சியாளர் பதவி:

## செவாக்கின் விண்ணப்பத்தில் ஆக பெயர் மட்டும்தானாம்!

இந்திய அணி பயிற்சியாளர் பதவிக்கான விண்ணப்பத்தை இரண்டு வரிகளில் மட்டும் பூர்த்தி செய்ய வில்லை. அப்படியே செய்திருந்தாலும், இதுவே எனது மொத்தத்தையும் சொல்லும் என இந்திய அணி முன்னாள் வீரர் செவாக் தெரிவித்தார்.

இந்திய அணி பயிற்சியாளர் கும்ளே. இவரின் பதவிக்காலம் முடிந்த நிலையில், பணி நீடிப்பு வழங்கப்படவில்லை. இந்திய கிரிக்கெட் சபை பயிற்சியாளருக்கான அறிவிப்பை வெளியிட்டது.

இந்திய முன்னாள் வீரர் செவாக் விண்ணப்பித்திருந்தார். இதில், தனது பெயரைக் கூட விரிவாக எழு தாமல் சுருக்கமாக விண்ணப்பத்தை அனுப்பி இருந்தார் எனக் கூறப்பட்டது.

இது தொடர்பில் செவாக் தெரிவிக்கையில்-

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பித்து உள்ளேன். இதில், பெயரை மட்டும் இரண்டு வரிகளில் ''பயோ-டேட்டாவாக'' அனுப்பியுள்ளேன் எனக் கூறுகின்றனர்.



இந்த இரண்டு வரிகளே, எனது மொத்தத்தையும் சொல்லிவிடும். இருப்பினும், இந்திய கிரிக்கெட் சபையின் விதிகளின்படிதான் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்துள்ளேன்.

எப்படி அமைதியுடன் செயற்படுவது என்பதை கங்குலிதான் எனக்கு கற்றுத்தந்தார். இந்திய அணித் தலைவர்களில் இவர்தான் சிறந்தவர். எனது மூடநம்பிக்கைளை ஒழித்து, நம்பிக்கையை அதிகரித்தவர் சச்சின். இவருடன் எந்தவொரு நெருக்கடியும் இல்லாமல் விளையாடலாம். பவுண்டரியை சுதந்திரமாக விளாச முடியும். பாகிஸ்தான் அணிக்கு எதிராக எப்போதுமே விருப்பத்துடன் பங்கேற்பேன். வேகப்பந்து வீச்சாளர் சோயப் அக்தரின் பந்துகளை பவுண்டரிக்கு ஆர்வமாக விரட்டுவேன்.-என்றார்.

## பாக். அணித் தலைவரின் குழந்தை டோனி கையில்!




ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் நேற்று மதியம் மோதவிருந்த நிலையில்,

பாகிஸ்தான் அணித்தலைவர் சர்பாஸ் அகமதுவின் குழந்தையுடன், இந்திய வீரர் டோனி எடுத்துக் கொண்ட புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் இந்தியா-பாகிஸ்தான் மோதின. இந்தப் போட்டிக்காக பலத்த எதிர்பார்ப்பு நிலவிய சமயத்தில் பாகிஸ்தான் அணித் தலைவர் சர்பாஸ் அகமதுவின் ஆண் குழந்தையை, இந்திய வீரர் டோனி தன் கையில் தூக்கி வைத்தபடி நிற்கும் புகைப்படம் வெளியாகியுள்ளது.

பெரும்பாலான ரசிகர்கள் ஆவலுடன் பகிர்ந்து கொண்ட இந்தப்படம் சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவியது.



# நான்கு போட்டியில் பங்குபற்ற கம்பிருக்கு தடை விதிப்பு!

பயிற்சியாளருடன் மோதிய பிரச்சினையில் கம்பிருக்கு நான்கு போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது. இருப்பினும், நிபந்தனைகளுடன் இத்தடை இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்திய அணி முன்னாள் தொடக்க வீரர் கம்பிர், வயது 35. தேசிய அணியில் ஒரு நாள் அரங்கில் மட்டும் 147 போட்டிகளில் (5,238 ஓட்டங்கள்) விளையாடி உள்ளார். இந்திய அணி சார்பில், கடைசியாக ராஜ்கோட் (எதிர்- இங்கிலாந்து, நவ.2016) டெஸ்டில் பங்கேற்றார். உள்ளூர் போட்டிகளில் டில்லி சார்பில் விளையாடி வருகிறார்.

இதற்கிடையே, கடந்த (பெப்ரவரி -மார்ச் 2017) விஜய் ஹசாரே கிண்ண ஒரு நாள் தொடரில் பங்கேற்றார்.

சக வீரர்களான உன்முக்த் சந்த், நிதிஷ் ராணாவை சில போட்டிகளில் புறக்கணித்த காரணத்தால், ரஞ்சி அணி பயிற்சியாளர் கே.பி., பாஸ்கருடன் வார்த்தை மோதலில் ஈடுபட்டார். அணியில் நிரந்தர இடம் கிடைக்க,வீரர்களுக்கு மனதளவில் நெருக்கடி தருகின்றார் எனப் பயிற்சியாளர் மீது கம்பிர் முறைப்பாடு செய்தார்.

இது குறித்து விசாரிக்க டில்லி கிரிக்கெட் சங்கம் சார்பில் நீதிபதி விக்ரம்ஜித் சென் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

இக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

கடந்த மார்ச்மாதம் 6ஆம் திகதி புவனேஷ்வரில் நடந்த போட்டியில் டில்லி அணி பங்கேற்றது. இதில் விளையாடாத கம்பிர் விடுதியில் தங்கி இருந்தார்.

உணவு இடைவேளையின்போது பயிற்சியாளரை அழைத்துள்ளார். இதனால், முன்கூட்டியே இந்த மோதலை கம்பிர் திட்டமிட்டிருந்தது தெரிகிறது. 'டிரசிங் ரூமில்' இருந்த இளம் வீரர்களை வெளியே அனுப்பி உள்ளார்.

பின், பயிற்சியாளரிடம் ஆக்ரோஷமாக பேசியுள்ளார். இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த சில இளம் வீரர்கள் நடந்ததை ஒப்புக்கொண்டனர். இதுவும் கம்பிர் மோதலில் ஈடுபட்டதற்கான ஆதாரமாக கிடைத்துள்ளது.

மதிப்பு வாய்ந்த பயிற்சியாளரை இப்படி பேசியமை தவறானது. இம்மாதிரியான சம்பவம், இனி நடக்காமல் இருக்க தண்டனை தர வேண்டும். அணியில் வீரர்கள் ஒழுக்கத்துடன் நடத்து கொள்வது அவசியம். காம்பிருக்கு 4 முதல் தர போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்படுகிறது. இருப்பினும் அடுத்த 2 ஆண்டுக்குள் (மார்ச் 30, 2019 வரை) இத்தடை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது. இந்தக் கால கட்டத்தில் இம்மாதிரியான செயலில் கம்பிர் ஈடுபட கூடாது. எங்களது உத்தரவுகளையும் ஏற்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்படுகிறது. வீரர்களின் நலனுக்காக குறைதீர் மையம் ஏற்படுத்தப்படும். - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் நிபந்தனையை கம்பிர் தாம் ஏற்றுக்கொள்கிறார் என அறிவித்தார். இதனையடுத்து, தடை வாய்ப்பிலிருந்து அவர் தற்காலிகமாகத் தப்பியுள்ளார் எனக் கூறப்பட்டது.



# நோர்வே செஸ்: ஆனந்துக்கு 7ஆவது இடம்

நோர்வே செஸ் போட்டியின் 9ஆவது மற்றும் கடைசிச்சுற்றில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சனுடன் 'டிரா' செய்தார்.

நோர்வேயின் ஸ்டவாங்கர் நகரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 9 ஆவது சுற்றின் முடிவில் ஆர்மீனியாவின் லெவோன் ஆரோனியன் 6 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்து சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்காவின் ஹிகாரு நாகமுரா, ரஷ்யாவின் விளாதிமிர் கிராம்னிக் ஆகியோர் தலா 5 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தைப் பிடித்தனர்.


அமெரிக்காவின் ஃபாபியானோ கருணா, அமெரிக்காவின் வெஸ்லே சோ, நெதர்லாந்தின் அனிஷ் கிரி ஆகியோர் தலா 4.5 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

ஆனந்த், கார்ல்சன், பிரான்ஸின் மேக்ஸிம் வச்சியர் ஆகியோர் தலா 4 புள்ளிகளுடன் 7 ஆவது இடத்தைப் பகிர்ந்து கொண்டனர். ரஷ்யாவின் செர்ஜி கர்ஜாகின் 3.5 புள்ளிகளுடன் 10 ஆவது இடத்தைப் பிடித்தார்.

(உ)

# வெறுப்பு விசனத்தை ஏற்படுத்தும் வகையில் வடக்கு மாகாண சபையின் இன்றைய நிலை

தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் தியாகிகள் தினம் இன்றாகும். அதனையொட்டி அக்கட்சி 'தியாகிகள் தினச் சிந்தனை'யாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு இதுவாகும்.



30 ஆண்டுகளுக்கு மேலாக பல்லாயிரக்கணக்கான மக்களையும் போராளிகளையும் எம் தோழர்களையும் இழந்து நாம் பெற்றவைதான் என்ன? இந்த கேள்வியை நாம் சாதாரணமாகக் கடந்து செல்கிறோம். இந்த உயிரிழப்புத் தியாகம் சர்வசாதாரணமானதா? ஆனால், இவைபற்றிய பிரக்ஞை எதுவும் அற்றுத்தான் இன்று காரியங்கள் நிகழ்கின்றன. யுத்தம் முடிந்து 7 ஆண்டுகளில் எல்லாமே மறக்கப்பட்டு வருகின்றன. தமிழ் மக்கள் இந்த நாட்டில் சக சமூகங்களுடன் சமத்துவமாக வாழவேண்டும் சகலவித மான சமூக அநீதிகளும் தகர்க்கப்பட வேண்டும் என்பதே போராட்டத்தின் சாராம்சமாக இருந்தது. ஆனால், போராட்டம் யுத்தத்திற்கு பிந்திய சூழலில் 7 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தத் தியாகங்கள் கருத்துக்கு எடுக்கப்பட்டிருக்கின்றனவா? அநியாய இழப்புக்களின் கனதி உணரப்பட்டிருக்கின்றதா??

போராடியவர்கள், இழப்புகளை சந்தித்தவர்கள் குறைந்த பட்ச கண்ணியமான வாழ்வைப் பெற்றிருக்கிறார்களா???

போராட்டத்தில் பங்குபற்றிய பெண்களின் நிலை என்ன? சமூக அநீதிகள் தொடர்பான விழிப்புணர்வு எதுவும் சமூகத்தில் நிலவுகிறதா?

சமூகங்களிடையே நல்லெண்ணத்திற்கான காத்திரமான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றனவா? பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் சமூக பாதுகாப்பு நிலை என்னமாதிரி இருக்கிறது?

தமிழர்களுக்கும் சக சமூகங்களுக்கும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஒருபடி தன்னும் முன்னோக்கிச் சென்றிருக்கிறோமா?

நிலத்துக்காகவும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காகவும் சிறையிலிருப்பவர்களின் விடுதலைக்காகவும் வேலை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காகவும் மக்கள் இளைஞர்-பெண்கள் நூறு நாள்கள் கடந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

குறைந்த பட்சம் அதற்கான ஜனநாயக சூழல் நிலவுகிறது. பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுவது, இராணுவ பிரசன்னம் குறைக்கப்படுவது, அதிகாரப்பகிர்ந்தளிப்பு, சமூக பொருளாதார அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு, வீதியில் இறங்கி போராடும் மக்களின் கோரிக்கைளுக்கு முன்னுரிமை இவை தமிழர் தலைமைத்துவத்தின் பிரதான கடமையாக இருக்க வேண்டாமா? ஆனால் என்ன நிகழ்கிறது. கன்னை பிரித்து ''குடுமி பிடிச் சண்டை'' நடக்கிறது.

இவ்வளவு பேரழிவும் தியாகமும் நிகழ்ந்த சமூகத்தில் யுத்தத்தின் பின்னமைந்த வடமாகாண சபையின் நிகழ்ச்சி நிரல் 3 வருடம் கழித்து ஊழல் துஷ்பிரயோகத்தைச் சுமந்து நிற்பது சமூக அக்கறை கொண்டோருக்கு விசனத்தையும் வெறுப்பையும் கவலையையும் ஏற்படுத்துவதாக அமைந்து விட்டது.

நம்பி தெரிவு செய்த மக்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

கிழக்கு, வடக்கு மாகாண சபைகள் சர்வதேச கரிசனைக்குரியவை. அவர்களின் பார்வையில் கோமாளிக் கூத்து - கையாலாகாத களமாக வடமாகாண சபை மாறியிருக்கிறது. தியாகங்களால் பெறுமதி சேர்க்கப்பட்ட தமிழர் விடயங்கள் நலங்கெட புழுதியில் எறியப் பட்டது போன்ற அவல நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பல்லாயிரம் மக்களும் போராளிகளும் பொது மக்களும் தியாகம் செய்து கிடைத்த பலாபலன்கள் பாதுகாக்கப்படுவதும் பேரழிவைச் சந்தித்த இந்த சமூகத்திற்கு பயனுடையதாக மாற்றுவதுமே நாம் மறைந்தவர்களுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

சிந்தித்து பாருங்கள்! எழிலார்ந்த கனவுகளுடன் உயிர்த் தியாகம் செய்தவர்களை நாம் மீண்டும் மீண்டும் கொல்லவில்லையா என்று. இவ்வளவு பெரிய தியாகங்கள் நடந்த மண்ணில் நாங்கள் ஒன்றும் பெரிய விம்பங்களாய் அல்ல. முகம் தெரியாமல் பல்லாயிரம் பேர் மரணித்த மண்ணில் கன்னை பிரித்து போலிக் கடவுளர் - கதாநாயக விம்பங்களை உருவாக்குவது சற்று எரிச்சலாக இருக்கிறது. இந்தப் போலி கதாநாயக வழிபாடு அல்ல. அதில் புளகாங்கிதம் அல்ல. துன்புறும் மக்களுக்கு அர்ப்பணிப்பதே இன்று பிரதான பணி.

எமது மக்களும் கண்மூடித்தனமான வழிபாடுகளைத் தவிர்த்து பகுத்தறிவின்பாற்பட்டு செயற்பட வேண்டும்.

குறுகிய அற்ப தனிப்பட்ட ஆள்களின் அரசியல் நலன்களுக்காக பெருவாரியான மக்களின் நலன்கள் அடைவு வைக்கப்படும் அவலம் வேண்டாம்.

வேற்றுமையில் ஒற்றுமை கண்டு மக்களுக்காக ஆக்கபூர்வமாகச் செயற்பட முனைவோம்.

இந்த 27 ஆவது தியாகிகள் தினத்தில் எமது வேண்டுதல் இதுவே!

சுகு- ஸ்ரீதரன்
தலைவர்,
தமிழர் சமூக ஜனநாயக கட்சி.

## இந்தச் சண்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

நேற்றுப் பகல் மட்டக்களப் பில் உள்ள அவரது அலுவலகத் தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் –

வடமாகாணத்தில் தற்போது நடைபெற்றுவரும் பிரச்சினை ஒட்டுமொத்தத் தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் அதிருப்தியையும் வேதனையையும் உண்டுபண்ணிய விடயமாக இருக்கின்றது.

ஊழல்செய்தனர்என்றுகூறி வடமாகாண அமைச்சர்கள் இருவரை முதலமைச்சர் விக்னேஸ்வரன் இடைநிறுத்தியிருக்கின்றார். இந்தவிடயத்தை இவ்வளவு தூரம் பெரிதுபடுத்தியிருக்க வேண்டியஅவசியமில்லை. கட்சி மட்டத்திலேகூடி, பேசித்தீர்த்திருக்கலாம். இன்றுஇப்பிரச்சினைவடகிழக்கில் பூதாகரமான பெரிய பிரச்சினையாகக்காணப்படுகின்றது.

நாங்கள்ஓர்அரசியல்தீர்வை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் தருணத்தில் இன்று ஏற்பட்டிருக்கின்றஇந்தப்பிரச்சினை தென்னிலங்கைஇனவாதக்கட்சிகளுக்கும்பேரினவாதிகளுக்கும் பெரும்அல்வாவாய்ப்புக்கிடைத்தது போன்றிருக்கின்றது.

இன்று நாங்கள் வடக்கு, கிழக்கு இணைப்பைப் பற்றியும் தீர்வைப்பற்றியும்பேசிக்கொண்டிருக்கின்றோம். இந்த நேரத்தில் ஒருமாகாணசபைக்குள்ளேநாம் இரண்டுபிரிவுகளாகப்பிளவுபட்டு நிற்கிறோம். ஒரு மாகாண சபையை கொண்டுநடத்துவதில் இவ்வளவு பிரச்சினைகள் இருக்கும் என்றால், எப்படி இவர்கள் வடக்கு, கிழக்கு இணைப்பைப் பற்றிப் பேச முடியுமென்று தென்னிலங்கையில்இருந்துஊடகங்களும் இணையத்தளங்களும் கேலித்தனமாகப் பேசுகின்ற நிலைமை. வடமாகாணசபை இந் நிலைமைக்குத்தள்ளப்பட்டிருப்பது தமிழ் மக்களுக்கு பாதிப்பையும் பெரும் வேதனையையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

எங்களுடையகட்சியானஜனநாயக மக்கள் முன்னணியைப் (புளொட்) பொறுத்தமட்டில் எங்களுடைய வடமாகாணசபை உறுப்பினர்கள் முதலமைச்சருக்கு சார்பாகவே கையொப்பமிட்டிருக்கின்றார்கள்.

எந்தவிதத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதனை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

ஒட்டுமொத்தத் தமிழ் பேசும் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக இருக்கின்றதமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உடைந்துபோகவேண்டும் எனப் பலர் தென்னிலங்கையிலும் வடக்கு, கிழக்கிலும், முழு இலங்கையிலும்வேலைசெய்து கொண்டிருக்கையில் இன்று ஏற்பட்டிருக்கின்ற வடமாகாண சபை விவகாரம் அவர்களுக்கு ஒரு பெரிய வழியைத் திறந்துவிட்டிருக்கின்றது. இதை ஒரு பெரும் அவமானமான விடயமாகவே நான் கருதுகின்றேன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்துகொண்டுதமிழரசுக் கட்சிஉறுப்பினர்களும்எதிர்க்கட்சி உறுப்பினர்களும் முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்திருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்து போனால் அதனால் தமிழரசுக் கட்சிக்கு எந்தப் பாதிப்புமில்லை. ஏனைய பங்காளிக் கட்சிகளுக்கும் பாதிப்பில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பி வடக்கு,கிழக்கில் வாக்களித்த தமிழ் மக்களுக்குச் செய்கின்ற துரோகமாகவே அது அமையும். ஆகவே நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தி ஒன்றிணைந்து ஒருமித்த நோக்கோடு மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

வடக்கு, கிழக்கில்எவ்வளவோ பிரச்சினைகள்உள்ளன. அந்தச் சூழலில் இன்று வடமாகாண சபையில்இருக்கின்றமுதலமைச்சரை அனுப்பிவிட்டு யார் முதலமைச்சராக வருவது என்ற பிரச்சினை உருவாகியிருக்கின்றது. இரு பிரிவு களாக பிரிந்து கொண்டு இடுகின்ற இந்தச் சண்டையானது தமிழ் மக்களுக்கு செய்கின்ற பெரும் துரோகமாகும்.

வடமாகாணத்திலும் சரி, கிழக்கு மாகாணத்திலும் சரி அமைச்சர்கள் செய்கின்ற ஊழலைப் பிச்சைக்காரனின் மடியில் கைவைக்கின்றசெயற்பாடாகவே நான் பார்க்கின்றேன். – என்றார்.

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டடமானது அரசியல் கட்சிகளின் நிகழ்வுகளுக்கு வழங்கப்படுவதில்லை எனவும், அதை மீறி அங்கு கலந்துரையாடல்ஏற்பாடுசெய்யப்பட்டமையாலேயே அமைதியின்மை ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

மேற்படி கட்டடத்தில் கலந்துரையாடல் நடத்துவதற்கு நிர்வாகத்திடம் இருந்து முறையான அனுமதிபெறப்பட்டிருக்கவில்லை. அக் கலந்துரையாடல் தொடர்பாக மக்களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

இதனால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அமைதியின்மையை அடக்குவதற்காக பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். எனினும், அந்தப் பொதுநோக்கு மண்டபத்தில் கூட்டம் நடத்துவதற்கு இறுதிவரை அனுமதி வழங்கப்படவில்லை.

நீண்டநேரம் நடந்த இழுபறிக்குப் பின்னர் அங்குள்ள வீடொன்றிலேயே கூட்டம் நடத்தப்பட்டது எனக் கூறப்படுகின்றது. (ம-100)

## 2 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகு ஒன்றைக் கடற்படையினர் சோதனைக்குட்படுத்திய போது, 4 பைகளில் கட்டி வைக்கப்பட்டநிலையில், இந்த ஆமைகள் கைப்பற்றப்பட்டுள் ளன. அத்துடன், அப்படகிலிருந்த இருவரையும் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கற்பிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த அவ்விருவரிடமும் மேற்கொள்ளப்பட்டவிசாரணைகளை அடுத்தே, சம்பவத்துடன் தொடர்புடைய மேலுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளாரெனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த நட்சத்திர ஆமைகள், நன்கு பொதி செய்யப்பட்டிருந்தன எனவும் வேறு ஒரு நாட்டுக்குக் கொண்டு சேர்க்கும் முகமாகவே, இவை இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன எனவும், இதற்கான மத்திய நிலையமாக இலங்கையை, இவர்கள் பயன்படுத்தியுள்ளனர் எனவும், கடற்படையினர் தெரிவித்தனர்.

சம்பவத்துடன்தொடர்புடையதானசந்தேகத்தின்பேரில்கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரையும், மேலதிக நடவடிக்கைகளுக்காக, சின்னப்பாடு சுங்க அலுவலகத்தில் தாம் கையளித்தனர் எனக்கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

## சமரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரமாச்சரிய சுவாமிகள், யாழ். ஆயர் வண. யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆகியோர் இன்று காலைவடக்குமுதல்வர்விக்னேஸ்வரனை மீண்டும் சந்திப்பர் என ஒரு தகவல் தெரிவித்தது.

ஏற்கனவே முதல்வர் விக்னேஸ்வரன் இருவரையும் அவர்களது இடங்களுக்குச் சென்று சந்தித்து, வடக்கில் நிலவும் கொந்தளிப்பு நிலைமை குறித்து விளக்கியிருந்தார்.

அதன் பின்னர் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் இருவரையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா இந்த இருவரையும் நல்லை ஆதீனத்திலும், ஆயர் இல்லத்திலும் நேரில் சென்று சந்தித்துப் பேசியிருந்தார்.

அந்தச் சந்திப்புக்களின் தொடர்ச்சியாக இன்று காலை மேற்படி இரு மதத்தலைவர்களும் வடக்குமுதல்வர்விக்னேஸ்வரனை அவரது இல்லத்துக்கு நேரில் வந்து சந்திக்கவிருக்கின்றனர் எனக் கூறப்பட்டது.

இணக்கம் ஏற்படுத்தக்கூடிய செய்தி எதனையும் அந்த மதத் தலைவர்கள் எடுத்து வரக்கூடும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன. (உ)

## துப்பாக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் மாலை எல்பிட்டிய – நுகேகொடை பிரதேசத்தில் காணிப் பிணக்கு ஒன்று காரணமாக மூவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமையுடன், இருவர் மீது கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தினார் என அவர் மீது குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர்கள் காராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ)

## இனமுறுகலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனாவுடன் நேரடித் தொடர்பில் இருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இரு பௌத்த மதகுருமார்கள் உள்ளிட்ட மேலும் இருவரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பிரியந்த ஜயக்கொடி கூறியுள்ளார்.

இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் அரசியல்வாதிகளால்வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைக்கு சட்டமாஅதிபரின்ஆலோசனையைத் தாங்கள் எதிர்பார்க் கின்றனர் எனவும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மஹிந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பில்அந்தக்கட்சிஉறுப்பினர்முன்னாள்அமைச்சர்பசில் ராஜபக்ஷவிடம் வினவிய போது –

"சில குற்றச்சாட்டு உள்ளவர்களை நீக்குவது குறித்து நாம் எதிர்ப்பு வெளியிடவில்லை. எனினும், கூறப்படும் இந்த விடயங்களுக்காக விக்னேஸ்வரன் நீக்கப்படக் கூடாதென்றே நாங்கள் நம்புகின்றோம்.

"இதற்கு முன்னர் வடமாகாண சபையால் நாட்டின் சமாதானம், ஒற்றுமை மற்றும் சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் யோசனை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

"அந்த சந்தர்ப்பத்தில் வடமாகாண சபை உறுப்பினர் தர்மபால செனவிரத்ன மாத்திரமே அதற்கு எதிர்ப்பு வெளியிட்டார்." – என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## திருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கடிதத்தின் முழு விவரமும் வருமாறு :-

18.06.2017

கௌரவ நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் அவர்கள்,

முதலமைச்சர் – வடக்கு மாகாணம்.

அன்புக்குரிய விக்னேஸ்,

தங்களது 17.06.2017 திகதியிடப்பட்ட கடிதத்திற்கு நன்றி.

எமக்கு முன்னால் உள்ள பிரச்சினையை மட்டுமே நான் கையாளுவேன். விசாரணைக் குழுவால் குற்றவாளிகளாகக் காணப்படாத இரண்டு அமைச்சர்களுக்கும் எதிரான தண்டனைச் செயற்பாடு நியாயப்படுத்தக் கூடியதா என்பதே அது.

இரண்டு அமைச்சர்களுக்கும் எதிராக, அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படாதபோதிலும் நீங்கள் மேற்கொண்ட தண்டனை நடவடிக்கையே தற்போதைய குழப்பங்கள் எழக் காரணமாகியுள்ளது.

உங்களைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று கட்சித் தலைவர்களினதும் ஆலோசனைக்கு அமைவாக, ஏதேனும் விசாரணையின் போது இரண்டு அமைச்சர்களினதும் நடத்தை தொடர்பாக நான் ஓர் உத்தரவாதத்தைத் தந்தால், அந்த அமைச்சர்கள் இருவர் தொடர்பான திருத்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்ற எனது கருத்தை, கட்சித் தலைவர்களும் ஆதரிப்பார்கள் என்ற ஆலோசனையைக் கூறியுள்ளீர்கள்.

விசாரணை தொடர்பாக இரண்டு அமைச்சர்களினதும் நடத்தையையிட்டு நான் உத்தரவாதமளிக்க வேண்டுமென்று எவ்வாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

அத்தகைய உத்தரவாதமொன்றை நிச்சயமாக நான் தரப்போவதில்லை. நான் ஏற்கனவே தெரிவித்திருந்தபடி இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு மாறான தங்களுடைய நடவடிக்கையின் தொடர்ச்சியாக மாகாண சபையில் ஏற்பட்டுள்ள குழப்பநிலைமையைச் சீர்செய்வதற்காகவே நான் எனது ஒத்துழைப்பை நல்க முயற்சிக்கின்றேன்.

எனினும், ஒரு சட்டரீதியான, சுதந்திரமான விசாரணைக்குத் தடைகள் எதனையும் ஏற்படுத்தக்கூடாது என நான் அந்த இரு அமைச்சர்களுக்கும் நிச்சயமாக ஆலோசனை கூறுவேன்.

இந்த விடயம் மேலும் தாமதப்படுத்தக் கூடியதென நான் கருதவில்லை. ஆதலால் தாங்கள் தாமதமின்றிச் செயற்பட வேண்டும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளில் எனது செல்வாக்கைச் செலுத்த வேண்டிய தேவையுள்ளதாகத் தாங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவராக மாவை. சேனாதிராசா அவர்களும், தற்போதைய செயலாளர் நாயகமாக திரு.கே.துரைராஜசிங்கம் அவர்களும் உள்ளனர்.

இ.த.அ.கட்சியின் மத்திய செயற்குழு ஒழுங்காகக் கூடுகின்றது. நான் இ.த.அ.கட்சியின் ஒரு சிரேஷ்ட உறுப்பினர் என்பதோடு, ஒரு காலத்தில் அதன் தலைவராகவும் இருந்தேன்.

தந்தை செல்வநாயகம் அவர்கள் தலைமைதாங்கிய இலங்கைத் தமிழரசுக் கட்சியும், தமிழர் விடுதலைக் கூட்டணியுமே எப்பொழுதும் எனக்கு உரித்தான அரசியல் இயக்கங்களாகும்.

வடக்கு மாகாணத்துக்கான முதலமைச்சர் வேட்பாளராகத்

பக்கம் 03 ›››

## சம்பந்தனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள்நேற்றுமுதலமைச்சரைவற்புறுத்திக்கேட்டுக்கொண்டனர்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சி அல்லாத மூன்று கட்சிகளின் தலைவர்களே இந்தக் கோரிக்கையை நேற்று முன்வைத்தனர்.

புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி., ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோரே இந்தக் கோரிக்கையை நேற்றிரவு முதல்வரிடம் முன்வைத்தனர்.

அந்த ஆலோசனையைசாதகமாகப் பரிசீலிக்கும் எண்ணத்தில் முதல்வர் இருக்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மூன்று தலைவர்களுடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், கே.சர்வேஸ்வரன், தமிழ் மக்கள் பேரவையைச் சேர்ந்த டாக்டர்கள் பூ.லக்ஷ்மன், சிவன் சுதன் போன்றோரும் நேற்றிரவு 10.30 மணிவரை சுமார் இரண்டு மாணி நேரம் முதல்வருடன் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடினர்.

முதல்வர் விக்கிக்குத் தாம் அனுப்பிய பதில் கடிதத்தில், முதல்வர் கோரிய உறுதிமொழியைத் தாம் வழங்க முடியாது இருக்கின்றார் என சம்பந்தன் தெரிவித்துள்ள போதிலும் –

"எனினும், ஒரு சட்ட ரீதியான, சுதந்திரமான விசாரணைக்குத் தடை எதனையும் ஏற்படுத்தக் கூடாது என நான் குறித்த இரு அமைச்சர்களுக்கும் நிச்சயமாக ஆலோசனை கூறுவேன்."

பக்கம் 03 ›››

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்போது முதலமைச்சருக்கு தமது ஆதரவை அக்குழு வெளிப்படுத்தியதாகவும் முதலமைச்சர் எடுக்கும் முடிவுகளுக்கு தாம் உறுதுணையாக இருப்பதாகவும் முதலமைச்சரிடம் தெரிவித்துள்ளது.

அப்போதே அந்த மருத்துவர்களுக்கு முதல்வர் மேற்கண்டவாறு மக்கள் அலுவலகம் திறக்கும் தமது திட்டம் குறித்து குறிப்பிட்டுள்ளார்.

## பிரச்சினைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாம் இந்த விடயத்தில் எடுத்துள்ள தீர்மானம் குறித்து முதலமைச்சர் இன்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எழுதும் கடிதத்துடன் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சூழல் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சம்பந்தன் தமக்கு நேற்று அனுப்பிய வைத்த கடிதம் தொடர்பில்பலதரப்பினருடனும் முதலமைச்சர்நேற்றிரவு 10.30 மணி வரை விரிவாக ஆராய்ந்தார். சாதக, பாதகங்களைப் பலருடனும் அவர் விவாதித்தார்.

தற்போதைய சூழலில் முதல்வர் தமது பதவியில் தொடர வேண்டியதன் அவசியத்தை – கட்டாயத்தை – சில தரப்பினர் அவருக்குச்சுட்டிக்காட்டினர்என்றும் கூறப்பட்டது.

பக்கம் 03 ›››

# இனத்துக்காக குரல் கொடுப்போரை தண்டிக்க முனைகிறது இந்த அரசு

## குற்றம் சாட்டுகிறார் மஹிந்த



கொழும்பு, ஜூன் 19

தங்களின் மதத்துக்காகவும், இனத்துக்காகவும் குரல் கொடுப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு, இந்த அரசால் சட்டம் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

மாத்தறைப் பிரதேசத்தில் விகாரையொன்றின் கட்டடம் ஒன்றை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பௌத்த மதத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகின்றது. புதிய சட்டங்களைக் கொண்டு வந்து மதம், இனம் என்பவற்றிலிருந்து மக்களைத் தூரப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது, சமயத்தின் மீதுள்ள பற்று அதிகரிக்குமே தவிர அவை குறைவடையமாட்டா.

இந்த அரசில் பௌத்த பிக்குகளும், நாட்டுக்காக தமது உயிரையும் பொருட்படுத்தாது பணியாற்றியவர்களுமே அதிகமாகத் துன்புறுத்தப்படுகின்றனர். -என்றார்.

நாட்டில் இனவாதத்தை ஒழிப்பதற்குத் தேவையான சட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும், தேவைப்படின் புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்தியாவது இனவாதத்தை இல்லாமல் செய்வோம் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் இனவாதச் செயற்பாடுகளின் பின்னால் உள்ளவர்கள் பொதுபல சேனா அமைப்பினர் தான் அவர்களுக்கு அரசே அடைக்கலம் வழங்குகின்றது என்றுமஹிந்த ராஜ பக்ஷ கூறியிருந்தார்.

அரசின் அடைக்கலம் இல்லாவிடின் அவர்கைது செய்யப்பட்டிருக்கவேண்டும் என்ற கருத்தையே அவர் முஸ்லிம்களுக்கு நடத்திய இப்தார் நிகழ்வின் போது கூறியிருந்தார் என்பதும் நினைவுகூரத்தக்கது.

## நாளை மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ் பிரதேசத்தில் மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குளாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக் கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும்.-

கிளிநொச்சி பிரதேசத்தில் இரணைமாதநகர், விஜி வீதி ஆகிய இடங்களிலும்.-

வவுனியா பிரதேசத்தில் தேக்கவத்தையிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

## 'சிரச் சேதம்' செய்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு!

நுகேகொடை, பழைய கெஸ்பேவ வீதியிலுள்ள விளையாட்டு மைதானத்துக்கு அருகில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பெண்ணின் சடலம் சிரச்சேதம் செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது என நுகேகொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்தில் தேடுதல் நடத்தியபோது, அந்தச் சடலமும் கொலைக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் கத்தி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. அந்தக் கொலையை பெண்ணின் காதலனே செய்துள்ளார் என்று சந்தேகிக்கின்றோம் என்றும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முல்லைத்தீவில் கடும் காற்றுடன் மழை!



முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்ட நாள்களாக கடும் வறட்சி நிலவிவந்த நிலையில் நேற்றுமுன்தினம் கடும் காற்றுடன் கூடிய கனமழை பெய்தது. வறட்சியால் பல்வேறு நெருக் கடிக்குள்ளாகிவந்த மக்கள் மத்தியில் தற்போது ஒரு பாதுகாப்பான நிலை காணப்படுகிறது.

## 'இதயக்கனல்' கவிதை நூல் வெளியீட்டு விழா 22இல்

சாவகச்சேரி, ஜூன் 19

தமிழ் ஆசானும் கவிஞருமான த.நாகேஸ்வரன் எழுதிய ''இதயக்கனல்'' கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானை கம்பன் கல்லூரி வளாகத்தினுள் அமைந்துள்ள தென்மராட்சி இலக்கிய அணியின் தமிழ்க் கோட்ட மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தென்மராட்சி இலக்கிய அணியின் அமைப்பாளர் அ.வாசுதேவா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் ஜானகி தம்பதியினர் கலந்து கொண்டு மங்கல விளக்கேற்றிவைக்கவுள்ளனர். நிகழ்வில் ஆசியுரைகளை அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரைகளை பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், வலம்புரி ஆசிரியர் ந. விஜயசுந்தரம் ஆகியோரும், நூல் வெளியீட்டுரையை முன்னாள் அதிபர் க.அருந்தவபாலனும், நயப்புரைகளை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன், யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியும் ஆற்றவுள்ளனர்.

முதற்பிரதியை கம்பவாரிதி இ.ஜெயராஜ் வெளியிட்டு வைக்க ஸ்ரீ முத்துமாரியம்மன் ரேடர்ஸ் உரிமையாளர் சி.சிவயோகன் பெறவுள்ளார்.

கௌரவ பிரதிகளை யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க.கந்தசாமி, வ.ஸ்ரீபிரகாஸ், கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய தலைவர் வி.மயூரன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் ந.சிவபாலன், தென்மராட்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சிவமுகுந்தன் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

(இ-21)

# ஓர் ஊடக நிறுவனத்தை மட்டுமே ஒருவர் நடத்துவதற்கான சட்டம் அவசியம் தேவை!

## அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 19

சில நாடுகளைப்போல் இலங்கையிலும் ஒருவருக்கு ஒரு ஊடக நிறுவனத்தை மாத்திரம் நடத்துவதற்கான அனுமதியை வழங்கக் கூடிய சட்ட ஏற்பாடுகள் அவசியம் என்று அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரங்க கலன் சூரிய தெரிவித்துள்ளார்.

பல வெளிநாடுகளில் ஒரு நபர், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை மாத்திரமே நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. எனினும், இலங்கையில் அவ்வாறான நடைமுறைகள் எவையும் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2017ஆம் ஆண்டுக்கான நிலையான ஊடக குறிகாட்டிக்கான ஆய்வு அறிக்கை வெளியிடும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றம், ஊடக மறுசீரமைப்புக்கான தேசிய செயலகம் ஆகியன சர்வதேச ஆய்வு மற்றும் பரிமாற்ற சபையுடன் இணைந்து இந்தக் குறிகாட்டியை வெளியிட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே ரங்க கலன் சூரிய இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்தவைவருமாறு:-

நல்லதோர் ஊடக கலாசாரம் வேண்டும் எனின் போட்டித்தன்மையுடன் கூடிய ஊடக சந்தை, அதற்கான சட்டம் மற்றும் கொள்கை வகுப்பு, தொழில்சார் ஊடகவியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பம் இந்த நான்கும் அவசியம். நாட்டில் ஊடக நிறுவனங்கள் காணப்படுகின்றன. எனினும் உரிமையாளர்கள் தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படுகின்றன.

சட்டம் மற்றும் கொள்கை திட்டமிடலில் அரசு தலையீடு செய்ய வேண்டும். சில சட்டங்கள் கொள்கைகள் ஊடகங்களுக்கு அவசியம். எனினும், இலங்கையில் அவ்வாறானதொரு சட்டம் இல்லை. அதில் குறைபாடு காணப்படுகின்றது. நாட்டின் ஜனநாயகம் மறு சீரமைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஊடகங்கள், மற்றும் ஊடகக் கொள்கைகள் தொடர்பான சட்டங்களும் மறுசீரமைக்கப்படவேண்டும். எனினும் அதில் சிவில் சமூக அமைப்புகளின் செயற்பாடுகள் அவசியம். ஊடக உரிமையாளர்களுக்கும் சில சட்டதிட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

ஒருவருக்கு அனைத்து வகையான ஊடகங்களினதும் உரிமையாளராக இருப்பதற்கு சில நாடுகளில் அனுமதியில்லை. ஒருவருக்கு ஒரு தொலைக்காட்சி அலைவரிசைக்கு மேல் உரிமையாளராக இருக்க முடியாது.

அவ்வாறான சில சட்டங்கள் இந்த நாட்டுக்கும் அவசியம். எதிர்காலத்தில் சில ஊடகங்களுக்குவழங்கப்பட்ட உரிமங்கள் தொடர்பில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் ஒப்பந்த முறைமையை ஏற்படுத்த நாம் நடவடிக்கைகளை மேற்கொள்வோம். -என்றார். (எ)

# தேர்தலில் முதல்வராகும் கனவுடன் 3 எம்.பிக்கள் பதவி துறப்பராம்!

கொழும்பு, ஜூன் 19

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவியை ராஜினாமாச் செய்யவுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டு எதிர்க்கட்சியின் சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி தயாராகி வருகிறார் என அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

இதனிடையே கூட்டு எதிர்க்கட்சியின் வடமத்திய மாகாண முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்கவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் வடமத்திய மாகாண முதலமைச்சர் வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொலோன்னேவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனடிப்படையில், மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் இவர்கள் மூவரும் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமாச் செய்வார்கள் என அரசியல் தரப்புத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (உ)









மூத்த ஊடகவியலாளரும், 'உதயன்' நாளிதழின் முன்னாள் செய்தி ஆசிரியருமான ஞா.குகநாதனின் 65 ஆவது பிறந்த தினமும், நாற்பதாவது திருமண நாளும், ஊடகத்துறையில் அவரது ஐந்து தசாப்தகால சேவை நயப்பும் நேற்றுமுன்தினம் சுவிஸ் நாட்டில் நடைபெற்றன. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# சம்பியன்ஸ் கிண்ணம் பாகிஸ்தான் அணிக்கு

## 180 ஓட்டங்களால் இந்தியா தோல்வி





லண்டன், ஜூன் 19

நேற்று லண்டன், கென்னிங்டன், ஓவல் மைதானத்தில் நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான கிரிக்கெட் இறுதியாட்டத்தில் தனது வைரியான இந்தியாவை 180 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து வெற்றிவாகை சூடியது பாகிஸ்தான்.

இந்தச் சுற்றுப் போட்டியின் முதல் சுற்று – குழு நிலை – ஆட்டத்தில் பாகிஸ்தானைத் தோற்கடித்த இந்தியா, நேற்று இறுதியாட்டத்தில் பாகிஸ்தானிடம் துவண்டு தோல்வியடைந்தது.

இந்த வெற்றியை நேற்று யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரப் பகுதியில் மக்கள் வெடிகொளுத்தி ஆரவாரத்துடன் கொண்டாடினர்.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய இந்திய அணித் தலைவர் முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தார்.

விளாசி அடித்து ஆடிய பாகிஸ்தான் அணி வழங்கப்பட்ட ஐம்பது ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 338 ஓட்டங்களைப் பெற்றது.

அஸார் அலி 59, பக்கர் சமான் 114, பாபர் அஸாம் 46, மொஹமட் ஹாபீஸ் ஆட்டமிழக்காமல் 57, இமாட் வாஸிம் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 30.3 ஓவர்களில் 158 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து பெரும் தோல்வியடைந்தது.

பண்டிய 76, யுவராஜ் சிங் 22, தவான் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

மொகமட் அமிர், ஹஸன் அலி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், சடப் கான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக பக்கர் சமான் (பாகிஸ்தான்), தொடர் நாயகனாக ஹஸன் அலி (பாகிஸ்தான்), தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக என்.தவான் (இந்தியா), தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக ஹஸன் அலி (பாகிஸ்தான்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

# குப்பைகளைச் சேகரிக்கும் பணியில் இராணுவத்தை ஈடுபடுத்தப் போவதில்லை

## இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரட்ன

குப்பைகளைச் சேகரிக்கும் பணியில் இராணுவத்தை ஈடுபடுத்தப் போவதில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

குப்பைகளை அகற்றும் செயன்முறைகளில் படையினர் உதவி வழங்குவார்கள் என்றபோதிலும், குப்பைகளைச் சேகரிக்க அவர்களை ஈடுபடுத்தப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகளவில் குப்பைகள் சேரும் இடங்கள் தொடர்பாகப் படையினர் பிரதேச சபைகளுக்கு அறிவிப்பார்கள் எனவும், கொழும்பு நகரில் இதற்காக இராணுவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் குப்பைகளைப் போடுவோரைக் கைது செய்ய பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# 7 வயதுச் சிறுவன் மீது சித்திரவதை; இராணுவச் சிப்பாய்க்கு விளக்கமறியல்

அநுராதபுரம், ஜூன் 19

ஏழு வயதுச் சிறுவனை சித்திரவதைக்கு உட்படுத்தினார் எனக் கூறப்படும், விசேட தேவையுடைய இராணுவச் சிப்பாய் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் – மிஹிந்தலை பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கடந்த 16 ஆம் திகதி மிஹிந்தலை பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற மேற்படி சிறுவனின் தாய், தம்முடன் வசிக்கும் விடேதேவையுடைய இராணுவ வீரர் தனது மகனை கொடூரமாகத் தாக்குகின்றார் என முறைப்பாடு செய்தார்.

அவரால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட சிறுவனையும் அவர் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று காண்பித்தார்.

இதையடுத்து அந்த இராணுவ வீரரைக் கைது செய்த பொலிஸார், நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுவன் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (ம)


CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
021 5674145
077 2931362


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2017 இல் அச்சிட்டப்பட்டுவெளியிடப்பெற்றது.